57

ஹரிஹர கதா ரத்னாவளி

பத்தாவது கதை

# அம்பரீஷ சரித்திரம்.



இந்த ஹரிகதை

ஸ்ரீ ரங்கம் ராமாயணம்

T. S. V. மஹாதேவ சாஸ்திரிகளால்

எழுதப்பட்டு

சென்னை.

தனியாம்பாள் விலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1926

COPY RIGHT REGISTERED

Q22
N26
184399

உ

# அம்பரீஷ சரித்திர சங்கிரக சுலோகங்கள்

இது பாகவதத்தில் 9-வது ஸ்கந்தம் 25-வது அத்தியாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லி இருக்கிறது;—

---

𑌶𑍍𑌰𑍀𑌶𑍁𑌕𑌃.

[illegible]𑌷𑍋 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌸𑌪𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑌵𑌤𑍀𑌂𑌮𑌹𑍀𑌂|
[illegible]𑌂𑌚 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌿𑌭𑌵𑌞𑍍𑌚𑌾𑌤𑍁𑌲𑌂 𑌭𑍁𑌵𑌿|| ௧||

𑌮𑍇𑌨𑍇𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤𑌂|
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌭𑌵𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌤𑌮𑍋𑌵𑌿𑌶𑌤𑌿𑌯𑌤𑍍𑌪𑍁𑌮𑌾𑌨𑍍|| ௨||

𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇𑌭𑌗𑌵𑌤𑌿 𑌤𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁𑌚𑌸𑌾𑌧𑍁𑌷𑍁|
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌭𑌾𑌵𑌂𑌪𑌰𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌯𑍇𑌨𑍇𑌦𑌂𑌲𑍋𑌷𑍍𑌟𑍍𑌰𑌵𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌂|| ௩||

𑌤𑌸𑍍𑌮𑌾𑌅𑌦𑌾𑌦𑍍𑌧𑌰𑌿𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌭𑌯𑌾𑌵𑌹𑌂|
𑌆𑌰𑌿𑌰𑌾𑌧𑌯𑌿𑌷𑍁𑌃𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌮𑌹𑌿𑌷𑍍𑌯𑌾𑌤𑍁𑌲𑍍𑌯𑌶𑍀𑌲𑌯𑌾|| ௪||

𑌯𑍁𑌕𑍍𑌤𑌃𑌸𑌾𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌂 𑌵𑍀𑌰𑍋𑌦𑌧𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀𑌵𑍍𑌰𑌤𑌂|
𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍇𑌮𑌾𑌸𑌿 𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍁𑌪𑍋𑌷𑌿𑌤𑌃|| ௫||

𑌸𑍍𑌨𑌾𑌤𑌃𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌕𑌾𑌲𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌂𑌹𑌰𑌿𑌂 𑌮𑌧𑍁𑌵𑌨𑍇𑌰𑍍𑌚𑌯𑌨𑍍|
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌂𑌶𑍍𑌚𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾𑌨𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌪𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑌃|| ௬||

𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌗𑍍𑌰𑍇𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌨𑍍𑌨𑌂 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌤𑌮𑌂|
𑌲𑌬𑍍𑌧𑌕𑌾𑌮𑍈𑌰𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌪𑌾𑌰𑌣𑌾𑌯𑍋𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇| ௭||

𑌤𑌦𑌾𑌤𑌿𑌥𑌿𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌯𑍋𑌗𑌿𑌸𑌤𑍍𑌤𑌮𑌃|
𑌮𑍁𑌨𑌿𑌂𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌤𑌂 [illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿|| ௮||

𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌗𑌤𑌃𑌸𑍍𑌨𑌾𑌤𑍁𑌂 𑌯𑌮𑍁𑌨𑌾𑌯𑌾𑌜𑌲𑌂𑌶𑍁𑌭𑌂|
𑌚𑌿𑌰𑌾𑌯𑌤𑌿𑌮𑍁𑌨𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀𑌂𑌨𑍃𑌪𑌃|| ௯||

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌹𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌕𑌲𑌿𑌤𑌾𑌨𑌲𑌿𑌤𑌞𑍍𑌯𑌕𑌃।
𑌉𑌤𑍍𑌪𑌵𑌃 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌂 𑌦𑌗𑍍𑌧𑍁𑌂 𑌤𑌯𑌨𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌂॥ ௰॥

𑌤𑌦𑌾 𑌪𑌦𑌶𑍍𑌵𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌾 𑌜𑌜𑍍𑌞𑍌 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌲𑌃।
𑌜𑌟𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌤𑌪𑍋𑌵𑌹𑍍𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍇॥ கக॥

𑌤𑌾𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌨𑍃𑌪𑌤𑌿𑌃 𑌨𑌚𑌚𑌾𑌲 𑌪𑌦𑌾𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌂।
𑌚𑌕𑍍𑌰𑌂 𑌹𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌸𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌣𑌂 𑌤𑌦𑌾॥ க௨॥

𑌦𑌦𑌾𑌹 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑌭𑍂𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌤𑌦𑌾।
𑌤𑌦𑍍𑌭𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌏𑌵 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌶𑌃॥ க௩॥

𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑌿𑌂 𑌶𑌂𑌭𑍁𑌂 𑌚 𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌂𑌵𑍃𑌤𑌃।
𑌹𑌰𑌿𑌣𑌾 𑌬𑍋𑌧𑌿𑌤𑌸𑍍𑌤𑍁 𑌅𑌂𑌬𑌰𑍀𑌷𑌪𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌂॥ க௪॥

𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌸𑌃 𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑍍𑌗𑍍𑌰𑍇 𑌸𑌾𑌰𑌸𑌂𑌜𑌸𑌾।
𑌤𑍇𑌨 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌭𑌵𑌜𑍍𑌜𑌗𑌤𑌾𑌂॥ க௫॥

𑌰𑌾𑌜𑌾 𑌤𑍇𑌨 𑌤𑌦𑌾𑌹𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌦𑌤𑍍𑌤𑍋 𑌭𑍇𑌦𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌯𑌾।
𑌸𑌹𑍈𑌵 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑌾𑌵 𑌨𑍃𑌪𑍇𑌶𑍍𑌵𑌰𑌂॥ க௬॥

𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌤𑌾𑌂 𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌂 𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌹𑌂 𑌯𑌯𑌾𑌪𑌤𑌂।
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸 𑌯𑌯𑍌 𑌯𑍋𑌗𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌸𑌹𑍋𑌤𑍍𑌸𑍁𑌕𑌂॥ க௭॥

𑌅𑌂𑌬𑌰𑍀𑌷𑌸𑍍𑌤𑌦𑌾 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌹𑌰𑌿𑌂।
𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌨𑌂 𑌵𑌿𑌵𑍇𑌶𑌾𑌶𑍁 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌪𑌰𑌾𑌯𑌣𑌃॥ க௮॥

𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸𑍇𑌨𑌾𑌂𑌬𑌰𑍀𑌷𑌸𑍍𑌯 𑌵𑍈𑌭𑌵𑌂।
𑌸𑌙𑍍𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑍇𑌜𑍍𑌜𑌨𑍋 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌹 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑌃॥ க௯॥

அம்பரீஷ சரித்திர சங்கிரக ச்லோகங்கள்

ஸம்பூர்ணமாயிற்று.

உ

## கதையின் சுருக்கம்.

---

# அம்பரீஷ சரித்திரம்.

---

அம்பரீஷ உபாக்யானத்தை தனக்கு விஸ்தரித்துச் சொல்ல வேண்டுமென்று கேட்ட பரீக்ஷித்து மஹாராஜனுக்கு சுகாசார்யார் தெரிவிக்கிறார்.

"வாராய் பரீக்ஷித்துமகாராஜனே! சூரியகுலத்து மன்னவர்கள் அரசுபுரியும் அயோத்தியா நகரில் அம்பரீஷனெனப் பெயர் கொண்ட ஓர் மன்னவன் மனுநெறி தவராமல் அரசாட்சி செய்து வந்தான். ஒரு சமயம் துர்பிக்ஷம் ஏற்பட்டு அவன் இராஜதானியில் ஜலம் இல்லாமல் போயிற்று. அதனால் மிகுந்த கவலையுற்ற மன்னவன் வசிஷ்டர், கௌதமர் முதலான மகரிஷிகளைக்கொண்டு அச்வமேதயாகம் செய்து தேசமெங்கும் சுபிக்ஷமாகச் செய்தனன். பின்பு வரவர கிரமேண அவனுக்கு ஹரிபக்தி ஏற்பட்டு, தன்வீடு, மனையாள், பிள்ளை, சதுரங்க சைன்யங்கள் முதலியனதுகள் நச்வரங்கள் என்று அதுகளில் பற்றொழிந்து, கர்மயோகங்களால் பகவானை ஸதா சந்தோஷிப்பித்து, தனக்கு ஸமான சீலமுள்ள தன் மனையாளுடன் கூடி ஒரு வருடகாலம் துவாதசீ விருதம் அனுஷ்டிக்க எண்ணங்கொண்டு, விதிப்படி அனுஷ்டித்துவந்தான். அப்போது முடிவாகிற கார்த்திகை மாதத்தில் யமுனா நதிக்கரையை யடைந்து அவ்விருதத்தை முடிக்க, மூன்று தினங்களும் உபவாசமிருந்து யமுனையில் நீராடி, அங்குள்ள யமுனாவனத்தில் ஸ்ரிய:பதிக்கு ஷோடசோபசார பூஜைகள் செய்து, பகவத் பக்தர்களை பூஜித்து, கொம்புகளுக்குத் தங்கப் பூணும், குளம்புகளுக்கு வெள்ளிப் பூணும், கழுத்துக்கு ஸ்வர்ணாபரணங்களும், மேலே பட்டு வஸ்திரங்களும் அணிந்த ஸாதுவாகிய 3 கோடி தலையீற்றுப் பசுக்களை கன்றுகளுடனும் கரவைப்பாத்திரங்கள் முதலிய உபகரணங்களோடும் தானம்செய்து

அதிதிகளுக்கு அன்னமிட்டு அவர்களனுமதியைப் பெற்று துவாதசிபாரணே செய்ய எத்தனிக்கும்போது, அவ்வரசனைப் பரீக்ஷிக்க வந்தவர்போல ருத்ராம்சமாகிய தூர்வாஸமாமுனி அங்கு தோன்றினர்.

அவரைக்கண்டதும் அம்பரீஷன் மிக்க பக்தி விசுவாசத்துடன் எதிர்கொண்டுபோய் அர்க்கியாதிகளால் பூஜித்து, அவரை அமுதுண்ண அதிதியாக வரித்தனன். அவரும் அதனே அங்கீகரித்து நித்ய கர்மானுஷ்டானம் செய்து வருவதாய் அரசனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, அவ்வரசனின் விருதபங்கம் செய்ய எண்ணங் கொண்டவர்போல் யமுனையில்நீராடி மிகுந்த காலதாமதம்செய்தார். அப்போது துவாதசி பாரணைக்கு அரை முகூர்த்தகாலம் மிச்சம் இருந்ததாலும், தூர்வாசர் விரைவில் வரமாட்டார் என்று தோன்றினதாலும் அம்பரீஷன் மிகுந்த வருத்தமுற்று அங்குள்ள பெரியோர்களைப் பார்த்து, இன்றையதினம் துவாதசி ஸ்வல்பம் இருக்கிறது. தூர்வாஸர் இன்னும் வரவில்லை. காலத்தில் பாரணை தவறினால் விருதபலம் கிடைக்காது அதிதியை விட்டுவிட்டு பாரணை எவ்விதம் செய்வது? என்று கேட்க, அவர்கள் அபிஷேக தீர்த்தமும் துளசியும் உட்கொண்டால் அசிதாநசிதம் என்னும் பாரணையாகும் அதனுல் அதிதியை அவமதித்த தோஷம் அணுகாது; என்று உரைத்தார்கள். அவ்விதம் அம்பரீஷன் தூர்வாஸர் வருவதற்கு முன்பு துளஸீ தீர்த்தம் உட்கொண்டான்.

உடன் அங்குவந்த தூர்வாஸர் அதை அறிந்து கோபங்கொண்டு அஞ்சலியஸ்தனுய் எதிரில் நிற்கும் அம்பரீஷ ராஜனைப் பார்த்து "அடே அம்பரீஷா! நீ மிக விஷ்ணுபக்தி புள்ளவன்போல் உன்னை எண்ணிக்கொண்டு என்னை அவமதித்துச் செய்த துவாதசீ பாரணை பலத்தை இதோ காண்பிக்கிறேன்." என்று கோபாடம்பரத்துடன் கர்ஜிக்கும் அவரைப் பணிந்து 'ஐயா முனி சிரேஷ்டரே! யான் தங்களை அவமதிக்கவில்லை. துவாதசி ஸ்வல்பமா யிருந்ததால் துளஸீ தீர்த்தபானம்தான் செய்தேன்.' என்று எவ்வளவு சமாதானம் செய்தும் தூர்வாஸர் அதை லக்ஷ்யம் செய்யாமல் மகா கோபாவேசம்கொண்டு தன் மகுடத்திலிருந்து ஓர் சடையை எடுத்து பூமிலடித்து ஓர் பூதத்தைப் படைத்து "ஏ பூதமே! என்னை அவமதிக்யித்த இந்த அம்பரீஷனை கபளீகரணம் செய்துவிட்டு வா" என்று

ஞாபித்து அனுப்பினர். பிரளயகால ருத்திரனைப்போல் வரும் அப் பூதத்தைக் கண்டு யாவரும் நடுங்க அம்பரீஷன் ஒடுங்கி தன்னை மறந்து பக்தரக்ஷகனை தியானம்செய்துகொண் டிருந்தான், அப்போது பக்தவத்ஸலனு லனுப்பப்பட்ட சுதர்சனம் என்னும் சக்ராயுதம் கோடி ஸூர்யனுக்கு மேலிட்ட காந்தியுடன் புரப்பட்டு அந்த பூதத்தை எறித்து பஸ்பம்செய்து பூதத்தை சிருஷ்டித்த தூர்வாஸரையும் துறத்திக்கொண்டு வந்தது. அதைக்கண்ட தூர்வாஸர் திடுக்கிட்டு நடுங்கி 'ஆ! ஆ! இதென்ன! நம்கார்யம் நிஷ்பலமாயிற்று. இந்த சக்கிரம் நம்மையும் சாம்பலாக்கிவிடும்போ லிருக்கிறதே!'' என்று பயந்தோடி, பூமி, பாதாளம், ஸ்வர்க்கம் முதலான இடங்கள் சென்றும் அந்த சுதர்ஸனம் தன்னை விடாமல் துறத்தி வருவதைக் கண்டு, ஸத்யலோகம் சென்று பிரும்மதேவனைப் பணிந்து ஸகல சங்கதிகளையும் தெரிவித்தார். அதைக்கேட்டு பிரும்மதேவன் 'ஓ தூர்வாஸமுனியே பாகவதாபராதியாகிய உன்னை என்னால் இரக்ஷிக்கமுடியாது. என்னைப்போலொத்தவர்கள் பகவானுடைய ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டவர்கள். இச்சுதர்ஸனத்தி லுற்பவித்த ஆயுதங்களே எங்கள் செங்கோல்கள். எங்களுக்கு இரைவனாகிய பகவானிடம் செல்லும்'' என்று பிரும்மனுரைத்ததைக் கேட்டு அவ்விடமிருந்து விரைவாய் கைலயங்கிரி சென்று உமாபதியை சரணமடைந்து வந்த சங்கதியைத் தெரிவித்து தம்மை ரக்ஷிக்குமாறு வேண்டினர்.

அதைக்கேட்ட நீலகண்டன் தூர்வாஸரைப் பார்த்து 'ஓய் தூர்வாஸரே! பாகவதாபராதியான உம்மை என்னால் ரக்ஷிக்க முடியாது. அந்த அம்பரீஷன் அகண்ட பரமாத்மாவினிடத்தில் பக்தி பண்ணினவன், அந்த பிரும்மத்தின் கண்டாவதாரமாக நானும் பிரும்மதேவனும் ஆவிர்பவித்து சிற்சில சமயங்களில் அவர் மாயையால் மயங்கி கலங்குகிறோம். இவ்விதமிருக்க பாகவதாபராதியான உம்மை இப்போது இச்சக்கிரத்தினின்றும் காத்திட என்னால் முடியாது. அந்த அகண்டமூர்த்தியையே சரணமடையப்போம்' என்றார் அதைக்கேட்ட தூர்வாஸர் தத்வமறிந்து பக்தவத்ஸலன் வசிக்கும் வைகுண்டம் சென்று ஸன்னிதியில் பணிந்து தீனபந்துவைக்கண்டு 'ஏ அச்யுத! ஏ அனந்தா! அடியார்க் கபராதியான அடியேனுக்கு அபயங் கொடுத்தருளவேண்டும். என்னை பஸ்பம் செய்யச் சீறிவருகிற சுதர்சனத்திலிருந்து என்னைக் காக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதைக்கேட்ட ஸ்ரீயஃபதி அம்முனியைப் பார்த்து 'ஓ

தூர்வாஸமுனியே! யான் பக்தவத்ஸலன் ஈஷணாத்ரயத்தை ஒழித்து என்னையே தஞ்சமாக எண்ணினவர்களை விட்டு யான் பிறிவதில்லை. உத்தமகுணமுள்ள மங்கை தன் நல்குணத்தால் தன் நாயகனை வசப்படுத்திக் கொள்வதுபோல என்னிடம் ஸ்திரமான பக்தியுள்ள பக்தர்களுக்கு யான் எப்போதும் வசப்பட்டிருப்பேன். அவ்வித பக்தர்கள் ஹிருதயத்தில் யானும் என் ஹிருதயத்தில் அவர்களும் எப்போதும் வாஸமாய் இருக்கக்கூடும். ஆகையால் ஓ முனிசிரேஷ்டரே! எந்த அம்பரீஷனிடம் நீர் அபசாரப்பட்டீரோ அந்த பக்தன்தான் உம்மை இரக்ஷிக்கக்கூடுமே யொழிய என்னால் முடியாது. அங்கே போம்'' என்று மாதவ னுரைத்தார்.

அதைக்கேட்ட தூர்வாஸர் அம்பரீஷன் மகிமையை நன்குணர்ந்து பூலோகத்திற் கோடிவந்து அம்பரீஷன் தாள்களில் தஞ்சம் என்றடிபணிந்து ''ஓ பக்த சிரேஷ்டரே! அம்பரீஷ மகாராஜனே! உமது அருமை யறியாமல் உலகெங்கும் ஓடியும் எனக்குக் கைகொடுப்பாரற்று உமது மகிமையை ஸ்ரீய:பதியால் நன்குணர்ந்து உம்மைச் சரணமாக அடைந்தேன். எனக்கு நீர்தான் ரக்ஷகன். யான் செய்த தீங்கை மறந்து என்னைக் கார்த்தருள வேண்டும்' என்று துதித்தார். அதைக்கேட்ட ராஜன் அதிக தயைகொண்டு அவரைத் துரத்திக்கொண்டு வரும் ஸ்ரீஹரிசக்ரத்தை ஸ்துதிசெயதார். அம்பரீஷன் ஸ்துதியைக் கேட்டு ஸுதர்சனம் தன் ஒளியை உள்ளடக்கி தன் இருப்பிடம் சென்றது. ஸுதர்சனம் மறைந்ததைக் கண்ட தூர்வாஸர் தான் புனர்ஜனன மடைந்ததாக எண்ணி அந்த ராஜரிஷியைக் கண்டு 'ஐயா ராஜரிஷியே! இச்சக்கிரத்தினின்றும் தப்பிப் பிழைக்கும்படி உதவிசெய்த உமக்கு, யான், என்ன அளிக்கவேண்டுமோ அதைக் கேளுமென் றுரைத்தார். அம்பரீஷன் 'ஐயா பெரியவரே! எனது கோரிக்கை யாதெனில் யான் ஜலபானத்துடன் தங்களுக்கமுது அளிக்கக் கார்த்திருக்கிறேன். தேவரீர் அமுதுண்டு அடியேனை கிருதார்த்தனாகச் செய்தருளவேண்டும் என்று கேட்டார். தூர்வாஸர் 'இவர் சொல்லும் வண்ணம் கேளாவிடில் சக்கிரம் மறுபடியும் வந்துவிடும்' என்று பயந்து 'இதோ அமுதுண்ண வந்துவிட்டேனென்று ஒப்புக்கொண்டு அம்பரீஷனால் கொடுக்கப்பட்ட உணவை புஜித்து அந்த ராஜனை ஆசீர்வதித்து விடைபெற்று சென்றார். அம்பரீஷன் பிறகு பாரணை செய்து விருதத்தை முடித்தான்.

இப்படி பரமபக்தனை அம்பரீஷராஜன் இல்லற வாழ்க்கையில் பற்றற்று தன் புத்திரன் வசம் ராஜ்யத்தை ஒப்புவித்து மனையாளுடன் தபோவனம் சென்று முகுந்த மலரடிகளில் மனதை நிறுத்தி நித்யானந்த மடைந்தார்.

இந்த அம்பரீஷோபாக்யானத்தைக் கீர்த்தனம் செய்கிறவரும், தியானிப்பவர்களும், பரமபாகவதர்க ளாவார்கள் என்று சுகாசார்யாள் பரீக்ஷித்துராஜனுக்குச் சொன்னர்.

அம்பரீஷ சரித்கிரம் முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠✠

உ

ஸ்ரீயைநம:

# அம்பரீஷ சரித்திர நாம ஸித்தாந்த நிருபணம்.

---

𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌂

## (1) காபி—ஆதிதாளம்.

𑌪𑌿𑌬𑌪𑌿𑌬𑌾𑌖𑌣𑍍𑌡𑌰𑌸𑌂 𑌮𑌨𑍁𑌜 (𑌪𑌿𑌬)
𑌶𑍁𑌕𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌤𑍍𑌸𑍍𑌰𑍁𑌤𑌾𑌰𑌸𑌦𑍍𑌰𑌵𑌸𑌂𑌯𑍁𑌤𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌤𑌰𑍁𑌫𑌲𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌮𑌨𑍁𑌜 (𑌪𑌿𑌬)

பிபபிப அகண்டரஸம் மனுஜா (பிப)
சுகதண்டாத்ஸுதா ரஸத்ரவஸம்யுதம்
ச்ருதிதருபலோத்பவம் மனுஜா (பிப)

..

**அவதாரிகை.**

ஆதௌ கீர்த்தனாரம்பத்தில் குருதேவர் என்னும், ஸாது இந்த பதத்தால் தெரிவிப்பது யாதெனில், ||ஹே மனுஜ 𑌸𑌾𑌦𑌰𑌮𑌖𑌣𑍍𑌡𑌰𑌸𑌂 𑌪𑌿𑌬𑌪𑌿𑌬|| ஏ மானவ நீ மிகஆதரவுடன் அகண்டரஸத்தை அனுபவி என்றார்—அகண்ட ரஸமென்றால் அழிவற்ற ரஸமென்றுபொருள்—சிற்றின் பரஸமெல்லாம், அனித்யமானதால், கண்டரஸமாகும் பேரின்பரஸம் நித்யமானதால் அதுதான் அகண்டமாகும் ஸ்வர்கானுபவரஸமும் நித்யமல்லவென்று கீதை 9-வது அத்தியத்தில் கூறியுள்ளது.

(2) 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌤𑍇 𑌤𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂
𑌕𑍍𑌷𑍀𑌣𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌂 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 |
𑌏𑌵𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌧𑌰𑍍𑌮𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾
𑌗𑌤𑌾𑌗𑌤𑌂 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌾 𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 ||

தைதம் புக்த்வா ஸ்வர்கலோகம் விசாலம்
க்ஷீணேபுண்யே மர்த்யலோகம் விசந்தி!
ஏவம் த்ரயீதர்மமனு ப்ரபன்னா
கதாகதம் காமகாமாலபந்தே!!

(இ-ள்) காம்யபுத்தியுடன் யாகாதிகளைச் செய்தவர்கள் அந்தப் புண்யம் உள்ளவரை ஸ்வர்கலோகானுபவத்திலிருந்து அந்தப்புண்யம் குறைந்ததும் பூலோகத்தில் பிறந்து மருபடி கர்மயோகத்தால் மேல்லோகம் போகிறதும் கீழ்லோகம் வருகிறதுமாயுமிருப்பதால் ஸ்வர்கானுபவரஸமும் அகண்டரஸ மல்ல. அகண்டரூபியான பரமாத்மாவின் ஸாக்ஷாத்காரத்தினுல் உண்டாகும் ஆனந்தம் தான் அகண்டரஸ மெனப்படும். அதை மனுஷ்யஜாதியில் பிறந்தயாவரும் எப்படி அடைவது என்பதை பகவத்கீதை 9-வது அத்தியாயம்: 32-வது சுலோகத்தில் தெரிவித்திருக்கிறா.

(3) 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌮𑌾𑌂 𑌹𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃 |
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ||

மாம்ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேபிஸ்யு ; பாபயோநய :
ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா சூத்ரா ஸ்தே பியாந்தி பராங்கதிம்.

(இ-ள்) 'ஓ அர்ஜுன! நீசகுலத்தில் பிறந்தவனானாலும், ஸ்திரீகள், வைச்யர்கள், சூத்ரர்கள் இவர்களாயிருந்தாலும் என்னை விதிப்படி ஆச்ரயித்தால் சாசுவதமான உயர்ந்த ஸ்தானத்தை அடைவார்கள்.' என்று சொல்லியிருப்பதால், அகண்டரஸம் என்பது பரமபதமாகும். அது எந்த மரத்திலுண்டான எந்த பழத்திலிருந்து எவ்விதம் வெளிவரும் என்பதை பிரதமபதத்தின் சரணத்தால் தெரிவிக்கிறார்.

𑌶𑍁𑌕𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌚𑍍𑌚𑍍𑌯𑍁𑌤𑌾 𑌰𑌸𑌸𑍁𑌧𑌾𑌦𑍍𑌰𑌵𑌸𑌂𑌯𑍁𑌤𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌤𑌰𑍋𑌃𑌫𑌲𑌂 (𑌭𑍋𑌜𑌾)

(இ-ள்) அகண்டரஸம் சுகாசாரியராகிய கிளியினால் அமிருதம் போல், ருசியுள்ள திரவமாக வெளியாயிற்று. அந்த திரவம் வேதமாகிய கற்பக விருக்ஷத்திலுண்டான பாகவதமாகிய பழத்திலிருந்து உண்டானது. அதைத்தான் அகண்டரஸம் என்பது அதை ஆதரவுடன் பானம்பண்ணுங்கள்' என்றார். அந்த அகண்டரஸமும் பரமபாகவதர்களால் உலகத்தில் பெருகிறது. பரமபாகவதாள் யார் யார் என்றால் அவர்களைத் தெரிவிக்கிறார்:—

(4) 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦 𑌨𑌾𑌰𑌦 𑌪𑌰𑌾𑌶𑌰 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕
𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌂𑌬𑌰𑍀𑌷 𑌶𑍁𑌕𑌶𑍌𑌨𑌕 𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑌾𑌲𑍍𑌭𑍍𑌯𑌾𑌨𑍍।
𑌰𑍁𑌕𑍍𑌮𑌾𑌂𑌗𑌦𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌨𑌿𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌮𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑍍 𑌸𑍍𑌮𑌰𑌾𑌮𑌿॥

ப்ரஹ்லாத நாரத பராசர புண்டரீக
வ்யாஸாம்பரீஷ சுகசௌனக பீஷ்மதால்ப்யான்:
ருக்மாங்க தார்ஜுன வஸிஷ்ட விபீஷணாதீன்
புண்யானிமான் பரமபாகவதான் ஸ்மராமி:

பகவத் பஜனை செய்யவேண்டுமானால் முந்தி ப்ரஹ்லாதர் முதலான இவர்களை ஸ்மரித்துக்கொண்டு பிறகு பகவத்பஜனை செய்யத் தொடங்கவேண்டும். அந்த பக்தர்கள் நித்யாள், ஜீவன்முக்தர்கள் லோகஸம்ரக்ஷணத்திற்காக இப்போதும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் திவ்யக்ஞானமில்லாதவர்களின் கண்களுக்கும் புலப்படமாட்டார்கள். அவர் கானம் செய்யுமிடங்களில் பகவான்

2

அவர்களின் நேரில் ஆவிர்பவித்து நர்த்தனம் செய்வார். தவிர ஒரு சமயம் நாரதர் வைகுண்டம் சென்று பகவானைக் கண்டு 'ஏ பிரபோ நாராயணா! ஸகுணரூபியான தங்களுக்குப் பிரியமான இருப்பிட மெது? அதைக் கூறவேண்டும்' என்று கேட்டார். அதற்கு பகவான் என்ன சொன்னாரென்றால்:—

(5) ಶ್ಲೋಕ

ನಾಹಂ ವಸಾಮಿ ವೈಕುಂಠೇ ನ ಯೋಗಿಹೃದಯೇ ರವೌ ।
ಮದ್ಭಕ್ತಾ ಯತ್ರ ಗಾಯಂತೇ ತತ್ರ ತಿಷ್ಠಾಮಿ ನಾರದ ॥

நாஹம்வஸாமி வைகுண்டே நயோகிஹ்ருதயே ரவௌ!
மத்பக்தா யத்ரகாயந்தே - தத்ரதிஷ்டாமி நாரத!!

(இ-ள்) 'ஹே நாரத! வைகுண்டம், யோகிகளின் ஹிருதயம் சூரியமண்டலம் இவைகள் எனக்கு இருப்பிடமாயிருந்தாலும், என் பக்தர்கள் எங்கேயாவது கானம் பண்ணினால் நான் மேல் சொன்ன இடங்களைவிட்டு அந்த இடம்போய் நின்றுகொண்டிருப்பேன்' என்று சொன்னார். ஆகையால் சேதனர்கள் பகவத்பஜனம் செய்வதானால் பரமபாகவதர்களான ப்ரஹ்லாதாதிகளை ஸ்மரித்துத்தான் பிறகு பகவானை பஜிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அவர்களும் வந்து சேர்ந்து பஜனம் செய்வார்கள். அப்போது பகவத் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். தவிர பிரஹ்லாதாம்சராகிய ஜகன்னாத தாஸரென்பவர் ஹரிகதாமிருத ஸாரம் இரண்டாவது ஸந்தியில் இதை வேறு விதமாக விசேஷமாக சொல்லியிருக்கிறார்.

(6) காம்போதி சாபு

॥ ಹರಿನೀಷ್ಟ್ವಿ ॥

ಮಲಗಿ ಪರಮಾದರದಿ ಪಾಡಲು-ಕುಳಿತು ಕೇಳುವ-ಕುಳಿತು
ಪಾಡಲು- ನಿಲುವ ನಿಂತರೆ- ನಲಿವ ನಲಿದರೆ-ಒಲಿವ ನಿಮ್ಮೊಳು ಬಾ-
ಸಾಲಪನೋಹರಿ ತನ್ನವರೆನರೆ-ಕಳಿಕಪಿಟ್ಟ ಳನುರಮಾ -
ತವನೊಲಿಸ-ಲರಿವ ದೇವಾ- ಮಾರುಪಳಲು ವರುಪವತೊಳಗೆ

மலகிபரமா தரதிபாடலு குளிது கேளுவ குளிது பாடலு
நிலுவநிந்தரே நலிவநலிதரே வலிவனிய கெம்பா
ஸாலபனோஹரி தந்நவரெநரே களிகபிட்ட ளனுரமா
தவநொலிஸ லரிவதோபா மாருபளலு வருபவதொளகே (ம)

(இ-ள்) (மலகி.........ட்லு) பக்தர்கள் மிகுந்த ஆதரவுடன்படுத் துக்கொண்டு பாடினால் (குளி......ளுவ) பகவான் அங்கு வந்து உட் கார்ந்துகொண்டு ஆனந்தமாகக் கேழ்பார் (குளிது பாடலு) பக்தாள் உட்கார்ந்து பாடினால் (நிலுவ) பகவான் அதை நின்றுகொண்டே கேழ்பார். (நிந்தரே) பக்தாள் நின்று பாடினால் (நலிவ) பகவான் நர்த்தனம் செய்துகொண்டே கேழ்பார். (நலிதரே) பக்தாள் நர்த்த னம் செய்துகொண்டே கானம் செய்தால் (வலி.......ம்பா) பகவான் அவர்களுக்கு பிரத்தியக்ஷமாவார். (ஸ-ப......களுனு) பக்தர்களுக்கு சுலபரான ஸ்ரீஹரியானவர் தன்னைச் சேர்ந்தவர்களைவிட்டு அரை நாழிகைகூட பிரியாமலிருப்பார். இவ்வித குணமுள்ள (ரமா....தெ லிகோ) லக்ஷ்மீபதியின் இங்கித மறியாமல் பாமரர்கள் இந்த பவசா கரத்தில் விழுந்து கஷ்டப்படுகிறார்களே! என்று தெரிவித்தார். (உதாஹரணம்:—பீஷ்மாசாரியார் சரதல்பத்தில் படுத்துக்கொண்டு பகவானை பஜித்தார். பகவான் உட்கார்ந்து கேட்டார். பண்டராபுரி யில் புண்டரீகன் உட்கார்ந்து பஜித்தான். பகவான் ஒரு செங்கல்லில் நின்றுகொண்டு விடல் என்று பெயர்கொண்டு அதைக்கேட்டார். பிரஹ்லாதர் நின்றுகொண்டு பஜித்தார். பகவான் தூணிலிருந்து நர்த்தனம் செய்துகொண்டு வந்தார். நாரதர் எப்போதும் நர்த்தனம் செய்து பஜிப்பார். பகவான் அவருக்கு எப்போதும் ஸாக்ஷாத்கார தரிசனத்தை தருகின்றார். தவிர பரமபாகவதாள் என்றால் வாஙோ ஞுதெ ஹாமவதாஞு - வாஙோஹாமவதா: அதாவது எவர்களுக்கு மேல்பட்ட பகவத்பக்தர்களே இடையாதோ அவர்கள்தான் பரம பாகவதாள். ஆகையால் இந்த பிரஹ்லாத நாரத முதலான பக்தர் களுக்கு மேல்பட்ட பக்தர்களே கிடையாது என்று நிர்ணயம் ஏற் பட்டது. இதற்கு உதாஹரணமாக;—ஒரு சமயம் நாரதர் இந்திரப் பிரஸ்தம் போய் பாண்டவர்களைக் கண்டார். அப்போது நாரதர் 'ஹே தர்மநந்தன, நீயும் உட்காரு. நீ ஒரு அரசன். (நாவிஷ்ணுப்ரு வீபதி:) என்கிறபடி நீ விஷ்ணு அம்சமுள்ளவன். ஆகையால் நீ பெ ரியவன். நீ உன்னுடைய ஸிம்மாஸனத்தில் உட்காரு' என்றார். அப்போது தர்மபுத்திரர் சொல்லுகிறார்.

𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌤𑌾𑌵𑌦𑌿𑌯𑌂 𑌮𑌹𑌤𑍍𑌸𑍁 𑌮𑌹𑌤𑍀 𑌤𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑌂 𑌵𑌾𑌰𑌿𑌧𑌿𑌃
𑌪𑍀𑌤𑍋𑌽𑌸𑍌 𑌕𑌲𑌶𑍋𑌦𑍍𑌭𑌵𑍇𑌨 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌸 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 𑌖𑌦𑍍𑌯𑍋𑌤
𑌵𑌤𑍍। 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌦𑌨𑍁𑌜𑌾𑌧𑌿𑌨𑌾𑌥𑌦𑌮𑌨𑍇 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌪𑌦𑌂 𑌨𑌾
𑌽𑌭𑌵𑌤𑍍 𑌦𑍇𑌵𑍋𑌽𑌸𑍌 𑌵𑌸𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌃 𑌕𑌃 𑌪𑌰𑌃

பிருத்வீ தாவதியம் மஹத்ஸு மஹதீ தத்வேஷ்டனம் வாரிதி:
பீதோஸௌ கலசோத்பவேனமுனினு ஸவ்யோம்னி கத்யோதவத்!
தத்விஷ்ணோர் தனுஜாதி நாததமனே பூர்ணம்பதம் நாபவத் தே
வோஸௌ வஸதித்வதீய ஹ்ருதயே த்வத்தோதிக: க: பர:

'ஐயா நாரதரே! இவ்வுலகில் எல்லாவற்றிற்கு பெரியது பூமி. அதிலும் பெரியது இந்தப் பூமியைச் சுற்றியிருக்கும் சமுத்திரம் அதற்கும் பெரியது அந்த சமுத்திர ஜலத்தைக்குடித்த அகஸ்தியர் அவரினும் பெரிது அவரை நக்ஷத்ர ரூபியாக வகிக்கும் ஆகாயம். பலிச்சக்ரவர்த்தியை நிக்ரகம் செய்த விஷ்ணுவின் ஓரடிக்குச் சரியாகாதது அந்த ஆகாசம். ஆகையால் ஆகாசத்தைவிடப் பெரியவர் ஸ்ரீமஹாவிஷ்ணு. அந்த விஷ்ணு தங்கள் மனதில் வஸிப்பதால், தங்களுக்கு மேல்பட்ட பெரியவர்கள் யாரிருக்கிறுர்கள்'' என்று தெரிவித்தார். இந்த விஷயத்தையே ஸாஸ்வதியின் அம்சமாகிய ஔவைபிராட்டி ஒரு அகவல் மூலமாகத் தெரிவித்திருக்கிறுள்:—

அகவல்.

பெரியது கேட்கில் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனே கரியமா லுந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றேன்
அலைகடலோ குறுமுனி கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக் கொரு தலைபாரம்
அரவோ உமையவள் சிறு விரல் மோதிரம்
உமையோ யிறையவர் பாகத் தொடுக்கம்
இறையவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே,

என்றபடி பகவத் பக்தர்களின் பெருமையைச் சொல்வது மிகவும் அரிது. பகவான் மேல்பட்டவராயிருந்தும் பக்தர்களின் நோக்கமறிந்து அவர்களைப் பெருமைப் படுத்திக்கொண்டு வருவார். அவர்களின் பக்கமிருந்து, அவர்கள் சொல்படி நடந்து, அவர்களுக்கு எவ்வித தீங்கும் வராமல் பாதுகாப்பார். அவர்களுக்குச் சென்ற விடமெல்லாம் ஜெயமே ஒழிய பராஜயமே கிடையாது என்பதை பீஷ்மர் மகாபாரதத்தில் சொல்லியிருக்கிறார்.

> 𑌲𑌾𑌭𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑌯𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍁𑌤𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌰𑌾𑌭𑌵𑌃।
> 𑌯𑍇𑌷𑌾𑌮𑌿𑌨𑍍𑌦𑍀𑌵𑌰𑌶𑍍𑌯𑌾𑌮𑍋 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃॥
>
> லாபஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராபவ!
> யேஷாமிந் தீவரச்யாமோ ஹ்ருதயே ஸம்ப்ரதிஷ்டித!!

(இ-ள்) எவர்கள் நீலோத்பல தளம்போன்ற மேனியுடைய பகவானை தியானத்தினால் ஸாக்ஷாத்கரித்திருக்கின்றார்களோ, அவர்களுக்கு நினைத்ததெல்லாம் கைகூடும். அவர்கள் சென்ற விடமெல்லாம் சிறப்புதான். அவர்களுக்கு அபஜெய மென்பதே கிடையாது.' என்று சொல்லியிருப்பதால் அந்த பரமபாகவதாள் மூலமாகத்தான் நாம் இந்த அகண்ட ரஸத்தை அநுபவிக்கவேண்டும். அவர்களிடம் நாம் பரமபக்தியுடன் கூடியிருக்கவேண்டும். அவர்களிடம் அநாதரவும் அலக்ஷ்யமும் த்வேஷமும் கூடாது. அப்படி யாராவது செய்தால் அதனால் அவர்களுக்கு ஒரு குறைவும் கிடையாது. மேலே சொன்னபடி அவர்களுக்கு எப்போதும் ஜயந்தான். ஆனால் அவர்களுககுக் கெடுதல் நினைப்பவாகளுக்குக் அந்த கெடுதல் உண்டாய் விடும். அது மற்றெந்த தெய்வத்தினிடம் போனாலும் தீராது என்பதற்கு திருஷ்டாந்தமாக கீழே சொன்ன பாகவதர்களில் ஆறுவது பக்தரான அம்பரீஷன் விஷயத்தில் துவேஷங்கொண்ட தூர்வாஸர் கஷ்டப்பட்டு கடைசியில் அவனாலேயே காக்கப்பட்ட அம்பரீஷோபாக்யானத்தை என் புத்திக் கெட்டினவரை சொல்லலாமென்றாரம்பித்தேன். கரும்பு கோணலாயிருந்தாலும் ரஸம் மாறாததுபோல் நான் சிற்றறிவுள்ளவனானாலும், பகவத்குணத்திற்குள்ள பெருமையைக்கொண்டு சபையிலுள்ள பெரியோர்கள் இதைக்கேட்டு கௌரவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

சுபம். சுபம். சுபம்.

நாமஸித்தாந்த நிரூபணம்,

முற்றுப்பெற்றது.

உ

# அம்பரீஷ சரித்திர நிரூபணம்.

## (1) சுலோகம்.

॥பரிக்ஷித॥ நாபாகஜே஽ம்பரீஷே து விப்ரசாப: கதாஹ்யபூத்
கதம் நஸஜ்ஜதே தஸ்மிந் வத விஸ்தரதோ மம ॥ [ஹைஹசுக।

நாபாகஜேம்பரீஷேது விப்ரசாப: கதாஹ்யபூத்!
கதம்நஸஜ்ஜதேதஸ் மிந்வதவிஸ்தரதோமம!!

(இ-ள்) பரிக்ஷித்து மஹாராஜன் சுகாசார்யாரிடம் கேழ்கிறுன். "ஐயா சுகாசார்யாளே! நாபாகராஜன் புத்திரரான அம்பரீஷமஹாராஜனிடம் பிராமண சாபம் எப்போது வந்தது, என்னமாக விலகிறது. இந்தகதையை எனக்கு விஸ்தாரமாக சொல்லவேண்டுமென பரிக்ஷித்து கேட்டான். சுகர் சொல்லுகிறுர்.

## (2) ஸாகி - ஆதி.

புவினி மிகுவுகபேர் கொங்கயயோத்யா புரினிஇனகுல ஜாதுண்டு:
ஓளநநி பூஜனு லெல்லநு மெச்சக தாநேல நம்பரீஷ—ண்டு

(இ-ள்) பூமியின்கண் மிக்கச் சிறப்புவாய்ந்த அயோத்திமாநகரத்தை சூர்யகுலத்தி லுதித்த அம்பரீஷனென்னும் சக்கிரவர்த்தி பூமியிலுள்ளோர் மெச்சும்படி பரிபாலித்தார்.

(வசனம்) எதனுல் ஸகலரும் அம்பரீஷனைக் கொண்டாடினுர்களென்றுல், அந்த சக்கிரவர்த்தி மனுநீதி தவராமல் அரசுபுரிந்து வருங்காலத்தில் ஒரு சமயம் தன் தேசத்தில் துர்பிக்ஷம்வந்தது. அப்போது எவ்வித பரிஹாரத்தாலும் அந்த பஞ்சம் விலகாமல் வஸிஷ்டாதி முனிவர்களால் நடத்திவைத்த அஸ்வமேத யாகத்தால் துர்பிக்ஷம் விலகிற்று. அதைப்பார்த்து இநத யாகத்திற்கு தெய்வமாகிய ஸ்ரீமந்நாராயணனே ஜன்மசாபல்யத்தைக் கொடுத்து அனுக்

கிரஹம் செய்யும் மூர்த்தி என்று தன்மனதில் தீர்மானம் ஏற்பட்டு, எப்போதும் பகவத்பக்தியில் ஈடுபட்டவராயிருந்தார்: எப்படி பக்தி பண்ணி வந்தாரென்றால்:—

(3) பியாக் ஸாகி ஆதி.

ச்சித்தமந்துஸகல லேந்திரயமுலதோ ஸ்ரீபதி பாதமுநுஞ்சி:
தத்வமெரிகிஙவ விதபக்திஜேஸெநு பக்தரக்ஷகுனி மெப்பிஞ்சி.

(இ-ள்) அந்த அம்பரீஷன் ஸகல இந்திரியங்களையும் தன் மனதுக்கு வசப்படுத்தி, அந்த மனதை ஸ்ரீபதியின் பாதத்தில் நிருத்தி, தத்துவமுணர்ந்து தனக்கு பகவத்கிருபை கிடைப்பதர்க்காக சிரவணாதி நவவித பக்திகள் செய்துவந்தார். எப்படி பக்திபண்ணினாரென்பதை ஆந்திரபத்தியத்தில் எழுதியிருக்கிறார்.

(4) ஸீஸபத்யம்.

சித்தம்பு மதுரிபு ஸ்ரீபாதமுலயந்து பலுகுலு ஹரிகுண படனமந்து
காமுலு விஷ்ணுமந்திர மார்ஜனமந்து ச்ரவணமுலு ஹரிகதாச்ரவணமந்து
ச்சூபுலு கோவிந்தரூப வீக்ஷணமந்த சிரமுகேசவ நமஸ்கிருதலயந்த
பதமுலீசவரகேஹ பரிஸர்பணலந்த காமம்புச்சக்ரி கைங்கர்யமந்த
ஸங்கமச்யுதகுணஸங்கமந்த க்ராணமஸுராரிபக்தாங்கிரி கமலமந்த
ரஸநதுளஸீதளபக்ஷணமந்த ரதுலபுண்யஸங்க துலயந்தயாராஜ சந்ரமுனகு

(இ-ள்) அந்த அம்பரீஷராஜன் சித்தம் பகவத் பாதத்திலும், வாக்கு ஹரிகுணங்களை படிப்பதிலும், கைகள் பெருமாள் கோயில் பெருக்குவதிலும், காதுகள் ஹரிகதை கேழ்ப்பதிலும், கண்கள் பகவானை தரிசிப்பதிலும், தலை கேசவமூர்த்தியை நமஸ்கரிப்பதிலும், கால்கள் பகவதாலயத்தைச் சுற்றுவதிலும், இச்சை பகவத் கைங்கர்யத்திலும், சேர்க்கை ஹரிபக்தாளிடத்திலும், மூக்கு அடியார் பாததூளியை முகர்வதிலும், நாக்கு பகவத்பாத துளசியை யுண்பதிலும், மிகுந்த ஆசையோடு கூடியிருந்தது. இவ்விதம் பக்தி பண்ணினதால் அந்த ராஜனுக்கு நாளுக்கு நாள் வைராக்யம் மேலிட்டு, இன்னம் எப்படி பக்தி பண்ணினாரென்றால் :—

(5) தன்யாசி . ஆதி.

ஸ்ரீஹரிபாத பத்மமேகதியனி சித்தமுல நிர்ணயிஞ்சி (ஸ்ரீஹரி)
வாஹந கஜஹயபதாதுலனு தந வெங்டராதனி கிருபசிகாமணியே
சிஞ்சி (ஸ்ரீஹரி)

(1) ஸம்சயமுபரி ஹரிஞ்சேபர ஹம்ஸாலதோகூடி கம்சாரிநாம
கரவாலமுலதோ ஸம்ஸாரபந்தன தந்துருலத்ருஞ்சி (ஸ்ரீஹரி)

(2) மான்யுடநய்யே மாயலேசய்யே மாநமுவிடி ஹரிநாமமுபாடி
மாதவுடேதந கிஷ்டபந்துவுலெனி மனஸாலோஸ்திரமுக
கொநியாடி (ஸ்ரீஹரி)

(வ-ம்) அந்த அம்பரீஷராஜன் ஹரிபாதமே தனக்குக் கதியென்றும் மற்ற கஜதுரகாதிகள் தன் பின்னோடு வாராதென்றும் நிச்சயித்து எல்லா சந்தேஹத்தையும் நிவர்த்திக்கும் பரமஹம்ஸனுடன் கூடி ஹரிநாமமாகிர கத்தியால் ஸம்ஸார பந்தத்தை அருத்து மான்யனாகவும், மாயையற்றவனாகவும் லஜ்ஜையைவிட்டு ஹரிநாமத்தையே பாடிக் கொண்டும் மாதவனே தன் பந்துவென்றும் கொண்டாடிக்கொண்டுமிருந்தான்.

(வ-ம) இவ்விதம் பக்திபண்ணும் அம்பரீஷன் ஸ்ரீஹரியின் பூர்ண கடாக்ஷத்தைக்கோரி ஓர் யாகம் செய்யத் துடங்கினர் எப்படி என்றால்:—

(6) 𑌭𑌾𑌗𑌵𑌤 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃॥

(1) 𑌈𑌜𑍇𑌽𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑍈𑌰𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌮𑌹𑌾𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑍋𑌪𑌚𑌿𑌤𑌾𑌂
𑌗𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍈𑌃। 𑌤𑌤𑍈𑌰𑍍𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌸𑌿𑌤𑌗𑍌𑌤𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌧𑌨𑍍𑌵
𑌨𑍍𑌯𑌭𑌿𑌸𑍍𑌰𑍋𑌤𑌮𑌸𑍌 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂॥

(2) 𑌕𑍃𑌤𑍇𑌷𑍁 𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌸𑍁𑌤𑍇𑌷𑍁 𑌬𑌨𑍍𑌧𑍁𑌷𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤
𑌮𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑌵𑌾𑌜𑌿𑌵𑌲𑍍𑌗𑍁𑌷𑍁। 𑌅𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌭𑌰𑌣𑌾𑌯𑍁𑌧𑌾𑌦𑌿
𑌷𑍍𑌵𑌨𑌨𑍍𑌤𑌕𑍋𑌶𑍇𑌷𑍍𑌵𑌕𑌰𑍋𑌦𑌸𑌨𑍍𑌮𑌤𑍀𑌂॥

(1) ஈஜேச்வமேதைரதியக்ஞமீசுவரம்மஹாவிபூத்யாபசிதாங்கதக்ஷிணை:
ததைர்வஸிஷ்டாஸிதகௌதமாதிபி: தந்வந்யபிஸ்ரோதமஸௌஸரஸ்வதீம்

(2) க்ருஹேஷு தாரேஷு ஸுதேஷு பந்துஷு த்விஜோத்தமஸ்யந்தனவாஜி
அக்ஷய்யவஸ்த்ராபரணயுதாதிஷ்வநந்தகோசேஷ்வகரோதஸந்மதிம் [பந்திஷு

(இ-ள்) அந்த அம்பரீஷன் ஸாரஸ்வதி நதிக்கரையில் வஸிஷ்டாதிகளுக்கும் பூர்ணமான தக்ஷிணைகொடுத்து ஆரம்பித்த அச்வமேத யாகத்தால் பகவானுக்குத் திருப்திசெய்ததால் வைராக்யம் மேலிட்டு

தன் வீடு, விட்டுக்காரி, பிள்ளை, பந்து, மித்திராள், சதுரங்கஸை ன்யம், ஆடை, ஆபரணம், ஆயுதம், பொருள் முதலியன அநித்திய மென்று தோன்றி, அதுகளில் பற்றொழிந்து எப்போதும் பகவத் தியானத்திலேயே ஆழ்ந்த சித்தமுள்ளவராகவே இருந்தார். அம்ப ரீஷன் சித்தபரிபாகத்தைபார்த்து பகவான் என்னசெய்தாரென்றால்.

(7) 𑌭𑌾𑌗𑌵𑌤 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌤𑌸𑍍𑌮𑌾 𑌅𑌦𑌾𑌦𑍍𑌧𑌰𑌿𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕 𑌭𑌯𑌾𑌵𑌹𑌂।
𑌏𑌕𑌾𑌨𑍍𑌤 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌨 𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌭𑍀𑌤𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌂॥

தஸ்மா அதாத்தரி:ச்சக்ரம் ப்ரத்யநீக பயாபஹம்!
ஏகாந்தபக்தியோகேன ப்ரீதோபீதாபிரக்ஷணம்!!

(இ-ள்) பரமைகாந்தியான அம்பரீஷனிடம் ப்ரீதியுடன் ஸ்ரீஹரி யானவர் சத்துருக்களாலும், மற்ற எக்காரணத்தாலும் யேர்படும் ஸகல பயத்தையும் நிவர்த்திக்க வல்லமையுள்ள தன் சுதர்சனமென் னும் சக்கிராயுதத்தை அந்த அம்பரீஷராஜனுக்குக் கொடுத்தார். அதனால் அந்த ராஜன் விசாரமற்று பகவானை எப்படி த்யானம் பண்ணிவந்தா ரென்றால்:—

(8) நாட்டைகுறிஞ்சி ரூபகம்.

ராரா இட்டுல ப்ரோவநன்னு ராஜீவாக்ஷ வேகமே (ராரா)
மாரஜகநின்னேகோரி நம்மிநானு வேரேலேது (ராரா)
(சரணம்) பதிதபாவன பக்தபாலன கதிநீவேயநி வேடிதி
க்ஷதிரஹித பதவியிச்சி வேகமே தேவதாஸ—நிகாவுமி (ராரா)

(இ-ள்) ஹே ராஜீவாக்ஷ, இங்கு வேகமாக வந்து என்னைக் காப் பாற்றும். ஏ மன்மதஜநக, தங்களையே நம்பியிருக்கிறேன், ஹே பதிதபாவன, பக்தரக்ஷக, தங்களையே கதியாக நம்பிய தாஸனான அடியேனுக்கு நித்யமான பதத்தைக் கொடுத்தாளவேண்டுமென்று ஸதா ஸ்தோத்திரஞ் செய்து வருவார். பிறகு, அம்பரீஷன் துவா தசீ விருதானுஷ்டானத்தால் பகவான் ரொம்பவும் திருப்தியடைவா ரென்னும் விஷயத்தை அறிந்து என்னசெய்தாரென்றால்,

### (9) ஆர்யா

𑌤𑌨𑌤𑍋𑌡𑌿 𑌨𑍀𑌡𑌵𑌲𑌯𑍆𑌯𑍁𑌨𑍁 -
𑌰𑍂𑌪𑌗𑍁𑌣𑌾𑌢𑍍𑌯𑌯𑌾𑌨𑌤𑌾 𑌸𑌹𑌿𑌤𑍋𑌡𑌨𑍍 |
𑌜𑌨𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌚𑌰𑌿𑌞𑍍𑌚𑍆𑌨𑍍 -
𑌘𑌨𑌮𑍁𑌖𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑍋𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍𑌬𑍆𑌟𑌨𑍍 ||

தனதோடிநீடவலயெயுனு - ரூபகுணாட்யயாநதாஸஹிதோடன்
ஜநவிபுதாசரிஞ்சென்- கனமுகபக்திதோத்வாதசீ வ்ருதம்பெடன்:

(இ-ள்) அந்த அம்பரீஷ மஹாராஜன் தன் தோழரோடும், தன் பட்டராணியோடும் மிகுந்த பக்தியுடன் துவாதசிவிருதம் ஆரம்பித்து, பிரதி மாதத்திலும் தசமியில் ஒருவேளை போஜனமும், ஏகாதசியில் சுத்தோபவாஸமும், துவாதசியில் காலேஸ்நாநம், ஜபானுஷ்டானம், பகவத்பூஜை, பாகவதாராதனை செய்து, துவாதசியிருப்பதற்குள் அடியார்களுக் கன்னமிட்டு தானும் துளஸீ தீர்த்தத்துடன் பாரணைசெய்து வருவார். இவ்விதம் பாரணைசெய்வதிலும் சில விசேஷ நியமங்களுண்டு அது என்னவென்றால்:—

### (10) பராசரஸ்மிருதி சுலோகம்.

𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌶𑌾𑌕𑌂 𑌤𑍁𑌲𑌸𑍀 𑌧𑌾𑌤𑍍𑌰𑍀𑌫𑌲𑌮𑌥𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌃 |
𑌯𑌤𑍍𑌕𑍁𑌕𑍍𑌷𑍌 𑌨𑌿𑌵𑌸𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑍋 𑌹𑌰𑌿𑌃 ||

அகஸ்த்யசாகம் துளஸீ தாத்ரீபலமதாச்யுத:
யத்குக்ஷௌ நிவஸதி தத்ரஸந்நிஹிதோஹரி:

(இ-ள்) துவாதசீ பாரணை செய்த எவர்கள் வயிற்றில் அகத்திக்கீரை, துளசி, நெல்லிக்கனி, ஹரிநாமம் இலவாளிருக்கின்றதோ அவனிடம் ஸ்ரீஹரி ஸாக்ஷாத்கரித்திருப்பார் என்று சொல்லியிருப்பதை அறிந்து, அம்பரீஷன் அவ்விதமே பாரணை செய்துவருவான். பிறகு, அம்பரீஷன் துவாதசீவிருதம் முடித்தான், எப்படியென்றால்:—

### (11) மத்தியமாவதி, ஆதி.

(1) 𑌉𑌡𑍁𑌪𑌵𑍍𑌰𑌤𑌦𑌾𑌸𑌲𑍍𑌵𑌿𑌯𑌾 - 𑌵𑍍𑌰𑌤𑌾𑌂𑌤𑌂𑌬𑌾𑌨 (𑌉𑌡𑍁𑌪)
𑌊𑌹𑌿𑌤𑌏𑌳 - 𑌕𑌾𑌤𑌿𑌲𑍍𑌕𑍋𑌸𑌰𑍋 | (𑌵𑍍𑌰𑌤𑌾)

(முடுக்கு) మూడురాత్రు లుపవాసమాచరించి యటు -
మీఁదకాళింది జలమునఁ గ్రుంకువెట్టి॥

(2) మధువనంబునకునేగి - మహితాభిషేకంబు (మధు)
మురవైరి కొసఁగి మోదమునతో (మహి)

(முடுக்கு) గంధపుష్పాదులతో ఘనత తోనర్చించి -
గోదాన మొసఁగి భూదేవతలకు॥

(3) బ్రాహ్మణోత్తములకెల్ల -
పంచభక్ష్యషడ్రసోపేత సాజ్యాన్నమిచ్చి।
(முடுக்கு) పారణసేయ బోవునప్పుడొక -
సంయమీంద్రుఁడు వచ్చునప్పుడొక॥

(1) இடுலவிருதமு ஸல்பியா விருதாந்தம்புண (இடு)
மஹிதமௌள கார்த்திக மாஸமந்து (விரு) மூடுராத்ரி யுப
வாஸமாசரிஞ்சயடு மீதகாளிந்தி ஜலமுலோக்ருங்குபெட்டி

(2) மதுவனம்புனகுயேகி மஹிதாபிஷேகம்பு (ம) முரவைரி
துலகொஸகிமோதமுதோ (மஹி) கந்தபுஷ்பாலுதோகனத
தோநர்ச்சிஞ்சி கோதானமொஸகிபூ தேவதுலகு!

(3) ப்ராம்மணோத்தமுலகெல்ல பஞ்சபக்ஷ்யஷட்ரஸோபே
ஸாஜ்யாந்நமிச்சி பாரணஸேயுபோவநபுடொக
ஸம்யமீந்துருடு வச்சேநபுடொக!

(இ-ள்) இந்தமாதிரி அம்பரீஷன் ஒரு வருடம் துவாதசீவிருத மனுஷ்டித்து, கடைசி கார்த்திகை மாசத்தில் மூன்றுதின முபவாஸ மிருந்து, அந்த துவாதசீ காலையில் யமுனாநதியில் ஸ்நானம்செய்து அக்கரையிலுள்ள மதுவனத்தில் ஸாளக்கிராமங்களுக்கு அபிஷே காதிகள் செய்து, கந்தபுஷ்பங்களால் அர்ச்சித்து, பூஜைநிவேதனம் செய்து, பிராம்மணர்களுக்கு விதிப்படி லக்ஷணத்துடன் கோதானம் செய்து பஞ்சபக்ஷயத்துடன் அறுசுவையுள்ள அன்னதானஞ் செய்துதான் பாரணை செய்ய ஆரம்பிக்கும்போது ஒரு மஹரிஷி அங்கு வந்தார்.

கோதானத்தின் புலன் என்னவென்றால்,

(12) ஶ்லோகம்

𑌗𑌵𑌾𑌮𑌙𑍍𑌗𑍇𑌷𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌸𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍।
𑌗𑌵𑌾𑌂 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌿𑌷𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌰𑍂𑌪𑍍𑌯𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌸𑍁𑌵𑌾𑌸
𑌪𑌯𑌶𑍍𑌶𑍀𑌲𑌵𑌯𑍋𑌰𑍂𑌪𑌵𑌤𑍍𑌸𑍋𑌪𑌸𑍍𑌕𑌰𑌸𑌮𑍍𑌪𑌦𑌾𑌮𑍍। [𑌸𑌾𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑍋𑌤𑍍𑌸𑌾𑌧𑍁𑌵𑌿𑌪𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌗𑍃𑌹𑍇𑌷𑍍𑌵𑌨𑍍𑌯𑌰𑍍𑌬𑍁𑌦
[𑌤𑍍𑌰𑌯𑌮𑍍॥

கவாமங்கேஷு திஷ்டந்தி புவனானி சதுர்தச
தஸ்மாதாஸாம் ப்ரதானேன ஸர்வதான பலம்லபேத்
கவாம்ருக்ம விஷாணானாம் ரூப்யாங்கிரீணாம் ஸுவாஸஸாம்
பயச்சீல வயோரூப வத்ஸா பஸ்கர ஸம்பதாம்
ப்ராஹிணோத் ஸாதுவிப்ரேப்யோ க்ருஹேஷுந்யர் புதத்ரயம்

(இ-ள்) ஒரு பசுவின் தேஹத்தில் பதினான்கு உலகங்களு மிருக்கின்றன. ஆகையால் கோதானம் செய்தால் ஸர்வ வஸ்துக்களுடன் ஸர்வலோகங்களையும் தானஞ் செய்தபலன் உண்டாய்விடுகிறது இதை நன்றாய் அறிந்த அம்பரீஷன் பசுக்கள் கொம்புகளுக்கு தங்க கொப்பிகளும், வெள்ளியால் கால்குளம்பு கட்டுகளும், மேல்பட்டு வஸ்திரங்களும், தலையீற்று பால் கறக்கும் குணமுள்ள பசுக்கள், கன்றுகளோடும், பால்கறக்கும் பாத்திரங்களோடு 3 கோடி கோதானம் பிராமணர்களுக்கு செய்து அவர்கள் கிரஹங்களுக்கு அனுப்பினார்.

(அவதாரிகை) அப்போது அம்பரீஷன் பாரணை செய்ய போகும் போது வந்த யோகி யாரென்பதை தெரிவிக்கிறார்.

(13) கந்தம்.

[illegible] -
[illegible]।
[illegible] -
[illegible]।

பூஸுரிகம பதோபக் யாஸௌ
ஸுதபோவிலாஸௌ ட்நுபமயோகா

..

ப்யாஸுடு ரவிபாஸுடு
தூர்வாஸுண்டொச்சே தன்னிவாஸம்புனகுன்!

(இ-ள்) வேதம், உபநிஷத் இதனர்த்தங்களை நன்கு உபதேசிக்க வல்லவராயும், தபஸியாயும், யோகிகளுக்கு சிரேஷ்டராயும், சூரியனைபோலுள்ள தேஜஸ்ஸுடன் உள்ளவராயும், உள்ள பிராமணரான தூர்வாஸ மஹரிஷி அம்பரீஷனருகே வந்தார்.

(14) ஸவ்வாய், அடதாளம்.

𑌵𑌚𑍍𑌚𑌿𑌨 𑌮𑍁𑌨𑌿𑌵𑌰𑌿𑌨𑌿 - 𑌮𑍇𑌚𑍍𑌚𑌗𑌾𑌨𑍇 𑌮𑍍𑌰𑍋𑌕𑍍𑌕𑌿 - 𑌵𑌤𑍍𑌸𑌲𑌮𑍁𑌤𑍋
𑌕𑍍𑌷𑍇𑌮𑌮𑌡𑌿𑌗𑌿 - 𑌮𑍇𑌚𑍍𑌚𑌿𑌗𑌤𑍋 𑌨𑌿𑌚𑍍𑌚𑍇- 𑌯𑌨𑍍𑌨𑌮𑍁 𑌮𑍇𑌚𑍍𑌚𑍁𑌸𑍁- 𑌭𑍁𑌜𑌿𑌂𑌚
𑌵𑌲𑍇𑌨𑌨𑌿𑌵𑍇𑌡𑌗𑌾। 𑌅𑌨𑌿𑌵𑍇𑌡𑌿𑌨𑌮𑍁𑌨𑌿 - 𑌮𑌨𑌮𑍁𑌨𑌨𑌪𑍍𑌪𑍋𑌂𑌗𑌿 -
𑌤𑌨𑌕𑌿𑌡𑌿 𑌮𑌤𑌮𑌨𑌿 𑌤𑌾𑌕𑌾𑌳𑌿𑌨𑍍𑌦𑍀 - 𑌜𑌲𑌮𑍁𑌨 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑍁𑌜𑍇𑌸𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨
𑌮𑍁𑌗𑌾 𑌪𑍍𑌰𑍋𑌦𑍍𑌦𑍁 - 𑌪𑍋𑌵𑌗𑌾 𑌨𑍁𑌂𑌡𑍇 𑌸𑌮𑌯𑌮𑍁𑌲𑍋॥

வச்சின முனிவரின் மெச்சகானேம்ரொக்கி வத்சலமுதோ க்ஷேமமத்திகி மெச்சிக தோசிச்சே யன்னமுமெச்சுசு புஜிஞ்சவலனேனி வேடகா அனிவேடினமுனி மனமுனநப்பொங்கி தனகிதி மதமனி தாகாளிந்தீ ஜலமுனஸ்னானமுஜேஸி த்யானமுகா ப்ரொத்து போவகா நுண்டே ஸமயமுலோ!

(இ-ள்) அந்தராஜன் வந்த தூர்வாஸமுனியை நமஸ்கரித்து, பிரியமாக குசலப்ரச்னஞ்செய்து, 'தாங்கள் என்னோடு பாரணை செய்ய வேண்டுமென்று' அழைக்க, அதற்கு அவர் ஒப்புக்கொண்டு யமுனை ஜலத்தில் நீராடி, அங்கு நிஷ்டையில் உட்கார்ந்து வருவதற்கு தாமஸமானவுடன் அம்பரீஷராஜன் என்னசெய்தாரென்றால்,

(15) தனாசரி, ஆதிதாளம்.

𑌪𑌿𑌲𑌪𑌿𑌚𑍍𑌚𑌨𑌾 𑌰𑌾𑌜𑍁 - 𑌵𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑍁 𑌨𑌗𑌰𑌮𑍁 (𑌪𑌿)
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮 - 𑌪𑌾𑌤𑌕𑌮𑍇𑌨𑌾𑌡𑌿 (𑌪𑌿)
𑌕𑌲𑍍𑌪𑌮𑍁 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀 - 𑌪𑌾𑌰𑌣𑌸𑍇𑌯𑍁 -
𑌕𑌲𑍍𑌪𑌨𑍇𑌡𑌵𑌿 - 𑌕𑌲𑍍𑌪𑌮𑌯𑍍𑌯𑌨𑍇𑌯𑌨𑌿 (𑌪𑌿)

பிலபிச்சேகா ராஜு விப்ருலநடுக (பி)
ப்ராம்மணாதிக்ரம பாதகுமோடி (பி)

அல்பமுத்வாதசி பாரணஸேயு
கல்பனநேடுவி கல்பமய்யனேயனி (பி)

(இ-ள்) அம்பரீஷன் வித்துவான்களை கூப்பிட்டு சபைகூட்டி, அன்று துவாதசி ஸ்வல்பமாயிருக்கிறது பாரணை செய்யவேண்டு மென்றால், பிராமணன் யமுனைக்குப் போனவர் வரவில்லையே என்ன செய்யலாமென்று கேழ்க்கிறன்.

(16) இந்துஸ்தாணி, தோடி.

𑌨𑍀𑌰𑍁𑌜𑍊𑌚𑍍𑌚𑌿 𑌰𑌾𑌡𑌾𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑌾𑌯।
𑌸𑌿𑌲𑍁𑌕𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍀 𑌅𑌲𑍍𑌪𑌮𑌾𑌯।
𑌨𑌿𑌯𑌮𑌮𑍆𑌟𑍍𑌲𑍁 𑌜𑌪𑌲𑌮𑍌𑌨𑌮𑍁 𑌬𑍁𑌧𑌲𑌾𑌰𑌾।
𑌨𑍇𑌡𑍍 𑌮𑍀𑌰𑍁 𑌵𑌿𑌚𑌾𑌰𑌮𑍁𑌗𑌾 𑌦𑍆𑌲𑍍𑌪𑌰𑌾𑌦𑌾॥

நீருஜொச்சி ராடாயா முனிராயா
சிலுகத்வாதசீ அல்பமாயா
நியமமெட்லு ஜபலமௌனு புதுலாரா
நேர்சிமீரு விவாரமுகா தெல்பாராதா!

(இ-ள்) ஓ வித்வான்களே! நீராடப்போன அந்த தூர்வாஸரின் னும்வரவில்லை, (சிலுக) துவாதசியான இந்த கார்த்திகை சுக்ல துவா தசியோ ஸ்வல்ப நாழிகைதானிருக்கிறது, இதற்குள் பாரணை செய் யாவிட்டால் நியமனம் தப்பிப்போகும். அதிதி வாராமல் பாரணை செய்யவும் கூடாது, இதற்கு என்னசெய்கிறது என்நியமம் தவராம லிருப்பதற்கு நீங்கள் ஒரு யோசனை சொல்லுங்கள் என்று அம்பரீ ஷன் வித்வான்களிடத்தில் கேட்டபோது. வித்வான்கள் என்ன சொன்னார்களென்றால்:—

(17) ஶ்லோகம்

𑌅𑌮𑍍𑌭𑌸𑌾 𑌕𑍇𑌵𑌲𑍇𑌨𑌾𑌥 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌪𑌾𑌰𑌣𑌂।
𑌆𑌹𑌾𑌰𑌭𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾 𑌅𑌶𑌿𑌤𑌾𑌨𑌶𑌿𑌤𑌂𑌚𑌯𑌤𑍍॥

அம்பஸா கேவலே நாதகுருஷ்வத்வந்து பாரணம்
ஆஹாரப் பக்ஷணம் விபாா அசிதாநசிதஞ்சயத்:

(இ-ள்) ஐயா ராஜனே! துவாதசி யிருப்பதற்குள் துளசீ, ஸாள கிராம தீர்த்தத்தை சாப்பிட்டால் பாரணை செய்தபலன் வந்துவிடும் இப்படி செய்வதை பெரியோர்கள் அசிதாநசிதம் என்பார்கள் சாப் பிட்டதாகவும், சாப்பிடாததாகவும் இதன்கருத்து, இப்படி செய்யு மென்றார்கள்.

(18) ஆர்யா.

అతివిరియా నరపతి రయముగ
జేసె సంపూర్ణపారణయునను|
మునిరాకకెదురుజూచి ముకుళిత
నిజపాణి పల్లవుండగుచును||

அதிவிரியா நரபதி ரயமுக
ஜேஸெஸம்பு பாரணயுனன்
முனிராககேதுருஜூசி முகுளித
நிஜபாணி பல்லவுண்டகுசுன்!

அதைகேட்டு அம்பரீஷன் அதிவிரைவாய் ஸாளகிராம தீர்த்தத்தால் பாரணைசெய்து, தூர்வாஸர் வரலைநோக்கி, அஞ்சலிசெய்த கையுடன் எதிர்பார்த்தார். அப்போ திரும்பிவரும் தூர்வாசர் அம்பரீஷன் செய்த பாரணை அறிந்து மஹா கோபத்தோடு இராஜனை மிரட்டி சொல்லுகிறார்.

(19) அடாணா, ஆதி.

யாரென்றென்னை நினைத்தாய் அமரேசன்போல்
மதம்பிடித்து (அடடபூபாலா) (யாரெ)

(1) பார்த்திவனே என்னை பாரணைக் கழைத்ததும்
தீர்த்தமாடி நான் திரும்பிவரும் முன்னே
நேர்த்தியாய் நீருண்டு நியமத்தை முடித்தாயாம
கீர்த்தியை யிதோநான் கருக்கிறேன் பாரடா (யாரெ)

(2) வாஸவனென் மாலையை லேசாய் நினைத்ததற்கு
மோசம் வந்ததே அவன் பதிக்கு
கேசவதாஸனென் றாசை வைத்தேனடா
பேசாமலிருந்தால் பதைக்குதே னெஞ்சம் (யாரெ)

அவதாரிகை.

இவ்விதம் தூர்வாசர் கோபங்கொண்டு தன் தபஸ்ஸை சிலவழித்து, தன் ஜடையிலிருந்து ஒரு பூதத்தை உண்டுபண்ணி அம்பரீஷனை கொல்லும்படி ஆக்ஞாபித்தனுப்புகிறார்.

### (20) பஞ்சசாமரம், ரூபகம்.

𑌅𑌂𑌤𑌕𑍃𑌤𑍍𑌯 𑌮𑍆𑌲𑍍𑌲𑌸𑌲𑍍𑌪𑌿 𑌯𑌂𑌬𑌰𑍀𑌷𑌸𑌂𑌗𑌤𑍁 -
𑌲𑌾𑌤𑍍𑌮𑌲𑍋 𑌨𑍆𑌰𑌿𑌂𑌗𑌿 𑌕𑍋𑌪 𑌮𑍁𑌕𑍍𑌕𑌲𑌿𑌂𑌬𑌕𑌾𑌲𑌕𑌾 -
𑌲𑌂𑌤𑌗𑍁𑌣𑍍𑌡𑍁 𑌵𑌾𑌲𑌨𑍊𑌕𑍍𑌕 𑌕𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌤𑍍𑌕𑌟𑌾𑌯𑍁𑌧𑍋 -
𑌲𑍍𑌲𑌾𑌸𑌿𑌕𑌾 𑌨𑍊𑌨𑌰𑍍𑌚𑌿𑌪𑌂𑌪𑍆 𑌨𑌾𑌜𑌡𑍁𑌣𑍍𑌡𑌹𑌂𑌯𑍁𑌡𑍆‖

அந்தக்ருத்ய மெல்லஸல்பி யம்பரீஷ ஸங்கது
லாத்மலோ நெரிங்கிகோப முக்கலிம்பகாலகா
லந்தகுண்டு வாலநொக்க க்ருத்யநுத்கடாயுதோ
ல்லாஸிகானொ நர்சிபம்பெ நாஜடு ண்டஹம்யுடை!

(இ-ள்) தூர்வாஸர் தன் அனுஷ்டானத்தை யெல்லா முடித்து, அம்பரீஷன் பாரணை செய்த சங்கதியறிந்து கோபங்கிளம்பி, பிரளயகால எமனைப்போல் பயங்கர சூலாயுதமும், கையுமான ஒரு பூதத்தை தன் ஜடையிலிருந்து உத்பத்திசெய்து அம்பரீஷனைகொல்லும்படி ஆச்ஞாபித்தனுப்புகிறார்.

வசனம்.

அதைக்கண்டு அம்பரீஷன் அந்த தூர்வாஸரிடம் எவ்வளவு சமாதானஞ் சொல்லியும், பிரயோஜனப்படாமல் போனதால் பகவானை நினைத்து ஸ்துதிக்கிறார்.

### (21) 𑌕𑌂𑌜𑌨𑍀𑌤𑌂| ஆதி 𑌸𑌾𑌰𑌂𑌗𑌾‖

𑌦𑌿𑌕𑍍𑌕𑍁 𑌨𑍀𑌵𑍇𑌰𑌾 𑌦𑍀𑌨𑌦𑌯𑌾𑌪𑌰𑌾 𑌚𑌕𑍍𑌕𑌨𑌿 𑌰𑌾𑌰𑌾-𑌬𑍍𑌰𑍋𑌚𑍇𑌦 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰 𑌪𑌰𑌮𑌕𑍃𑌪𑌾𑌕𑌰 𑌪𑌾𑌲𑌿𑌂𑌚𑍁 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰 𑌅𑌰𑌮𑍋𑌰𑌮𑍍𑌯𑌾𑌲𑌰𑌾‖ 𑌅𑌲𑌸𑌿 𑌨𑍀𑌪𑌾𑌦𑌮𑍁 𑌲𑌾𑌶𑍍𑌰𑌯𑌿𑌂𑌚𑌿𑌤𑌿𑌰𑌾 𑌜𑌲𑌧𑌿𑌶𑌯𑌨𑌨𑌾 𑌪𑍈𑌤𑍍𑌸𑌾𑌲𑌮𑍍𑌯𑌾𑌲𑌰𑌾 - 𑌬𑌿𑌲𑌿𑌚𑌿𑌨 𑌨𑌾𑌪𑍈𑌤𑌾 𑌪𑌲𑍁𑌕𑌵𑍇𑌯𑌾𑌲𑌰𑌾 𑌗𑍁𑌰𑍁𑌦𑌾𑌸𑍁𑌨𑌿 𑌨𑍇𑌲𑌰𑌾‖

திக்கு நீவேரா தீனதயாபரா க்ரக்குனராரா ப்ரொக்கேதா
ஸ்ரீதர பரமக்ருபாகர பாலிஞ்சு ஸ்ரீதர அரமோ ரம்யாலரா!
அலஸிநீபாதமு லாச்ரயிஞ்சிதிரா ஜலதிசயனஞ பைத்ஸாலம்
யாலரா பிலசினகாதோ பலுகவுயாலரா குருதாசுனி கேலரா!!

(வசனம்) இவ்விதம் அம்பரீஷன் மெய்மறந்து கதறும்போது என்ன நடந்ததென்றால்.

184399
சென்னை-600 008

(22) ஶ்லோகம்

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌹𑍍𑌯𑌤𑍍𑌯𑌰𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾।
𑌤𑌦𑌾𑌹𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌹𑌿𑌮𑌿𑌵 𑌪𑌾𑌵𑌕𑌃॥

ப்ரதிஷ்டம் பிருத்யரக்ஷாயாம் புருஷேண மஹாத்மனா
ததாஹகிருத்யாம் தாம்சக்ரம் க்ருத்தாஹி மிவபாவக:

(இ-ள்) பக்தர்களை காப்பதற்கு பகவானால் அனுப்பப்பட்ட சக்கிராயுதமானது கோபத்துடன் சீறிவரும் பாம்பை நெருப்பு கொளுத்தவதைப்போல், அந்தபூதத்தை பஸ்பம் செய்துவிட்டது, பிறகு மகா கோபியான இந்த தூர்வாஸர் இன்னம் ஏதேனும் விஷமம்பண்ணுவார். ஆகையால், இவரை கொளுத்திவிடுவோமென்று இவரைத் துரத்த ஆரம்பித்தது.

## 23. கானடா-தாளம்-ஆதி.

ஸ்ரீபதிசக்கிரம் சீறுவதைக்கண்டு சாந்தமில்லாமுனி சஹிக்காமல் மொண்டு
கோபத்தையொழித்து கூபஜலம்சென்றும் தாபம்தீராமலே தாணியெங்கும்
நாகலோகமுதல் மேலுலகெங்கெங்கு நாடினாலும் விடா நாதன்வாழியைக்கண்டு
லோகத்தைபடைக்கும் பத்மஜனிருக்கும் நோக்கந்தெரிந்தவர் பாதம் பணிந்தார்

வசனம்.

தூர்வாஸ ரெங்குசென்றும் சக்கிரம் துரத்திவருவதைக் கண்டு பயந்து, ஸத்யலோகம் சென்று பிரம்மாவிடம் ஸ்துதிக்கிறார்.

## 24. சுருட்டி-ஆதி.

பாலய பிரம்மதேவ பீதமிஹாகதம் (பாலய)
நீலகிரத தேஹ பக்தாரிம்மதி ஹீனம் (பால)
நளினவாஸந கலிதஸகலஜந
நந்திதமுனிஜந நமாமித்வாமனிசம் (பால)

(இ-ள்) ஐயா பிரமதேவனே, யான் புத்தியின்றி நீலமேகச்யாமளன் பக்தனான அம்பரீஷனிடம் அபசாரப்பட்டேன், என்னை ஹரிசக்கிரம் துரத்திக்கொண்டு வருகிறது, அதனால் பயந்து ஓடிவருகிறேன், என்னை இரக்ஷிக்கவேணும் ஐயா தாமரைபூவை பீடமாக

உடையவரே! உலகத்திற்கு சிருஷ்டி கர்த்தாவே, எப்போதும் ரிஷிகளுடன் கூடி பிரம்ம விசாரணை செய்கிறவரே, தங்களை தஞ்சமாக அடைந்தேன் என்று ஸ்துதித்து, பிரார்த்தித்தார்.

### அவதாரிகை.

அதைக்கேட்டு, பிரம்மதேவன் தூர்வாஸரிடம் என்ன சொன்னரென்றால்:—

### (25) 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌨𑌾𑌭𑌾𑌗𑌤𑌨𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌨𑍃𑌪𑍋𑌤𑍍𑌤𑌮𑌃
𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑌾𑌧𑍀 𑌭𑌵𑌸𑌿 𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑍋 𑌗𑌚𑍍𑌛 𑌦𑍂𑌰𑌤𑌃॥

நாபாகதநயோ விஷ்ணுபக்தச் ரேஷ்டோந்ருபோத்தம:
தஸ்யாபராதீப வஸித்வமிதோகச்ச தூரத:

(இ-ள்) ஓ தூர்வாஸரே! நாபாகன் குமாரனான அம்பரீஷன் விஷ்ணுபக்த சிகாமணி, நீர் அந்த பக்தரிடத்தில் அபராதஞ் செய்தவரானீர், உம்முடன் பேசினாலே அந்த விஷ்ணுசக்கிரம் என்னையும் பஸ்மம் செய்துவிடும், நீர் இவ்விடம் நிற்கவேண்டாம், வேறிடம் செல்லும் போமென்றார், அதைக்கேட்டு தூர்வாஸர் ரொம்பவும் பயந்து, கைலங்கிரி வந்து சங்கரனை துதிக்கின்றார்.

### 26. சங்கராபரணம் அடதாளம்.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கிசைத்து
முன்னார் செஞ்சடைமேல் மகிழ்கொன்றை யணிந்தோனே
மன்னே மாமணியே மழப்பாடியுள் மாணிக்கமே
அன்னேயுன்னை யல்லாலினி யாரை நினைக்கேனே.

### வசனம்.

இவ்விதம், தூர்வாஸர் ஸ்துதிக்கும்போது சங்கரன் திருப்தியடைந்து, ஓ தூர்வாஸரே! எங்கு வந்தீர்? வந்த விஷயமென்ன என்று கேழ்க்கும்போது, தூர்வாஸர் நடந்ததை சொல்லி இந்த ஹரிசக்கிரத்திலிருந்து தன்னை காக்கவேண்டுமென்று பிரார்த்தித்தவுடன் சிவபெருமான் சொல்லுகிறார்.

27. பியாகடை-ஆதி.

நாதோபாஸநா ஜேஸே சங்கர நாராயணு விதுல வெலஸிரீ ஓமனஸா நா

அனுபல்லவி.

வேதோத்தரலு வேதாதீதுலு விசுவமெல்லநிண்டி யுண்டேவாருலு

சரணம்.

மந்த்ராத்முலுயந்த்ர தந்த்ராத்முலுமரி மந்தராமுலெலன்னே கலவாருலு

தந்த்ரீலயஸ்வர கான விலோலுலு த்யாகராஜவந்துயுலு ஸ்வதந்தருலு நா

(இ-ள்) ஏ மனமே! சங்கரன், நாராயணன், விதியான பிரமதேவன் இந்த தேவதைகள் நாதரூபியான அகண்ட பிரமத்தை உபாஸித்து வேதோத்தரகாளாகவும், வேதாதீதாளாகவும் எல்லாஉலகங்களிலும் நிறைந்தவர்களாகவும், மந்திர மூர்த்திகளாகவும், யந்திரமூர்த்திகளாகவும், எல்லாமந்திரங்க ளறிந்தவர்களாகவும் தந்திலயத்துடன் கூடின ஸ்வரத்தோடுகூடிய கானத்தில் பிரியமுள்ளவர்களாகவும், தியாகராஜனுக்கு ஸேவிக்கத் தகுந்தவர்களாகவும், ஸ்வதந்திராளாகவும் விளங்குகிறார்கள் என்று தியாகய்யர்வாள் சொன்ன கருத்தின்படி சிவபெருமானும், ஏ தூர்வாஸரே! அகண்ட மூர்த்தியான பரமாத்மாவின் பக்தாபராதியான உன்னை ரக்ஷிக்க என்னால் முடியாது நீ வைகுண்டம் போ, என்றுரைத்தார்.

28 ஸாகி-ஆனந்தபைரவி ஆதி.

அந்தணனதைகேட்டு அதிகபயங்கொண்டு
ஹரிவைகுண்டம் சென்று அம்புஜாக்ஷன் திரு
வடிகளில் பணிந்து அபயங்கோரி பலறினன்

வசனம். என்னசொல்லி கதறினரென்றால்

(29) பாகவத சுலோகம்.

ஸஹஸ்ர ஶிரஸா ஜிதஶஸ்ரு வஹிநா
தத்தாத்யெவதிதஸ்யெவயாஃ|
ஸுஹாஜ் தாநம்த ஸதீவித வஹோ
க்ருதாமஸ்ஸெவிஶ்வஹாவந||
ஸுஜாநதாதெ ஜஹிராநஹாவம்
க்ருதம்யாவம் ஹவதஃ வியாணாம்|

ஸதஹ்யமானோ ஜிதசஸ்த்ராவன்னினா தத்பாதமூலே பதிதஸ்ஸவேபது:
ஆஹாச்யுதாநந்த ஸதீப்ஸிதப்ரபோ க்ருதாகஸம்மாமவ விச்வபாவன
அஜானதாதே மஹிமானுபாவம் க்ருதம் மயாகம் பவத: ப்ரியாணும்:

(இ-ள்) அந்த தூர்வாஸமுனி நிகரற்ற சக்கிராயுதஜ்வாலையால் கொளுத்தப்பட்டு, நடுக்கத்துடன் வைகுண்டபதியின் காலடியில் விழுந்து, ஹே அச்யுத! அனந்த சாதுக்களின் விருப்பத்தை பூரணஞ்செய்யும் பிரபோ! ஹே விசுவபாவன, குற்றவாளியாகிய என்னை, இரக்ஷிக்கவேணும், தங்கள் மஹிமை அறியாமல்தங்கள் அடியாருக்கு யான் செய்த அபராதத்திற்கு மன்னிப்பு செய்யுங்கள், தங்கள் பெயரை சொன்ன மாத்திரத்தில் நரகத்திலிருப்பவனும் கஷ்டத்தி லிருந்து விடுதலை யடைகிறன் தங்கள் திருவடிகளை அடைந்த அடியேனை கைவிடக்கூடாது என்று துதிக்கிறர்.

## 30. லதாங்கி ஆதி.

அபராதமு லன்னியுமன்னிஞ்சி ஆதரிம்புமய்ய வேஜேஸின (அப)

அனுபல்லவி.

க்ருபசேசினு மனவ்யாளகிஞ்சி கடகண்ட்லஜூட ஸமயமிதே (அப)

சரணம்.

வேகநன்னுப்ரோவு மனிநின்னெங்தோ வோண்டிகஸ்ரீ
வெங்கடேசுவரா ஜாகுசேயகனே வேததாளகனே
ஜாலிஜெந்திநிங்னு நொச்சுகெ:ன்னநா (அப)

(இ-ள்) ஐயனே! நான் செய்த குற்றங்க ளெல்லாவற்றையும் மன்னித்து ஆதரிக்கவேணும், கிருபைசெய்து என் மனுவைகேட்டு, தாங்கள் கடைக்கண்ணுல் பார்ப்பதற்கு இதுவே சமயம், ஹே வெங்கடேசா! சீக்கிரம் என்னை கார்க்கவேணுமென்று தங்களை எவ்வளவோ வேண்டிகொண்டிருக்கிறேன், தாபஸிக்கவேண்டாம், வேதனை பொருக்க முடியாமல் நான் கஷ்டப்பட்டு உம்மிடம நான்வருத்தங் கொண்டேனே, ஆகையால் என் அபராதத்தை மன்னிக்கவேண்டு

மென்று சுப்பிரமணியய்யரவர்கள் கீர்த்தனையைப்போல் கதறினர்) அப்போ பகவான் தூர்வாஸரிடம் பாகவத பெருமையை சொல்லுகினர்.

## 31. தன்யாஸி-ரூபகம்.

నాకు మేలుకోరు నా భక్తుడువాడు (నా)

(1) భక్తుడెందు జనిన పాదంబుల వెనువెంట -
గోవు వెత్తగుల కేడే బంగిని - (నా)

(2) తనువు మనవు తనయుల జట్టాలజ నుల్విడిచి -
సకలతలును విడిచిన భక్తుడుగువాడు (నా)

(3) నన్నే కాని యన్యమెన్నే డెరుగని వాని విడువ -
నెట్టివాని కైనను కాని భక్తుడుగువాడు (నா)

நாகுமேலுகோரு நாபக்துடகுவாடு நா

1, பக்துடெந்துஜநிந பாதந்துரு வெநுவெண்ட
கோவுபெத்தகுலு கேடேபங்கினி நா

2. தநுவுமனவுதநயுல ஜட்டாலஜநுல்விடிசி
ஸகலதலுனு விடிசினபக்துடகுவாடு நா

3. நந்நேகாநி யந்யமெந்நே டெருகநி
வாநி விடுவா நெட்டிவாநி கைநனு காணி பக்துடகுவாடு நா

(இ-ள்) ஓ தூர்வாஸா! என் பக்தாள் எனக்கு மேல்பட்டவர்கள், பக்தாளுக்காக இந்த பரமபதம் ஏற்பட்டிருக்கிறது. 1. புதிதாயீன்ற கன்றினிடம் அதன் தாயான பசுவிற்கு பிரியமிருப்பது போல் என் பக்தாளுக்கு நான் எப்போதும் வசப்பட்டவன். அவர் நோக்கத்துக்கிணங்கிதானிருப்பேன், ஏனென்றால், 2. பக்தர்கள் தன் தேஹம், மனைவி, மக்கள், சுற்றத்தார், சம்பத்து இதுகளில் இச்சையை ஒழித்து, என்னையே எப்போதும் நினைக்கும் தாஸாளல்லவா, 3. தவிர, அந்த பக்தர்கள் என்னைவிட்டு வேறொன்றையும் என்றைக்கும் நினைக்காதவர்கள், நானெப்படி அவர்களை கைவிடுவேனென்று சொல்லி, மறுபடியும் பாகவதாள் மஹிமையை சொல்லுகிறார்.

## (32) 𑌸𑌾𑌧𑌵𑌕 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃

(1) 𑌸𑌾𑌧𑌵𑍋 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌤𑍍𑌵𑌹𑌮𑍍।
𑌮𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑍇 𑌨 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌹𑌂 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑌨𑌾𑌗𑌪𑌿॥

ஸாதவோஹ்ருதயம்மஹ்யம் ஸாதூனும் ஹ்ருதயம்ஹயஹம்
மதன்யம்தே நஜாநந்தி நாஹம்தேப்யோ மனகபி

இ-ள். சாதுக்கள் ஹிருதயம் என்னிடமும், என் ஹிருதயம் அவாளிடமும் இருக்கும், அவாள் என்னைவிட்டொன்றையு மறியார்.

(2) 𑌅𑌥𑌾𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌿𑌶𑌾𑌚𑌸𑍍𑌤𑍇𑌯 𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌰 𑌵𑍈𑌭𑌵𑌾𑌨𑍍।
𑌸𑌾𑌧𑍁𑌷𑍁 𑌪𑍍𑌰𑌹𑌿𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌤𑍁𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌶𑌿𑌵𑌮𑍍॥

அதோஹ்யாத்மா பிசாரஸ்தேயதஸ்தம்யா.. வைபவான்
ஸாதுஷுப்ரஹிதம்தேஜ: ப்ரஹர்து; குருதேசிவம்!

இ-ள். ஆகையால் யாரைக்குறித்து ஹிம்சை செய்ய நினைத்தீரோ, அந்த அம்பரீஷனிடம் போகலாம், சாதுக்களுக்கு செய்யும் தீங்கு தனக்கே வந்துவிடும்.

(3) 𑌤𑌪𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑍇 𑌉𑌭𑍇।
𑌤𑍇 𑌏𑌵 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌨𑍀𑌤𑌸𑍍𑌯 𑌕𑌲𑍍𑌪𑍇𑌤𑍇 𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑌨𑍍𑌯𑌥𑌾॥

தபோ வித்யாச விப்ராணும் நிச்ரேயஸகரேஉபே
தஏவ துர்வினீதஸ்ய கல்பேதே கர்துரன்யதா:

இ-ள். தபம், வித்தை இரண்டும் பிராமணுளுக்கு மோக்ஷ ஸாதகங்களாகும், அதுகளே துஷ்டர்களுக்கு கஷ்டத்துக்கு காரணங்களாகும்.

(4) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌂𑌸𑍍𑌤𑌦𑍍𑌗𑌚𑍍𑌛 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌨𑌾𑌭𑌾𑌗𑌤𑌨𑌯𑌂 𑌨𑍃𑌪𑌮𑍍।
𑌕𑍍𑌷𑌮𑌾𑌪𑌯 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌂 𑌤𑌤𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿॥

ப்ரும்மம்ஸ்த்வம் கச்சபத்ரம்தே நாபாக தநயம்ந்ருபம்:
க்ஷமாபய மஹாபாக ததச்சாந்திர்பவிஷ்யதி!

இ-ள். ஓ பிராமணு! அந்த அம்பரீஷனிடப்போம், உமக்குக்ஷேமமுண்டாகும், அந்த ராஜனிடம் சென்று செய்த பிசகை மன்னிக்க

வேண்டுமென்று கேட்டுகொண்டால் இந்த ஜ்வாலைதணிந்து உம்மை விட்டு விலகிவிடுமென்று பகவான் சொல்ல, தூர்வாஸர் பகவானிடம் ஒரு ஸந்தேஹம் கேட்டார்.

### குறிப்பு.

தூர்வாஸர், பகவான் வார்த்தையைக் கேட்டு ஒரு ஸந்தேஹம் தெரிந்துகொள்ள, ஒரு கேழ்வை பகவானிடம் கேழ்க்கிறார், ஓ பிரபோ! முந்தி நான் ஸிருஷ்டித்த பூதத்தை தங்கள் சக்கிரம் பஸ்மஞ் செய்தவுடன் நான் என்தபஸ்ஸை சிலவழித்து அந்த சக்கிரம் ஒளி அழிந்துபோகும்படி சபித்தேன், அது பலிக்கவில்லையே இனி என் தபஸ்ஸுக்கு சக்தியில்லாமல் போய்விடுமோ என்னமோ தெரியவில்லையே என்று கேட்டார். அதற்கு பகவான் ஓ தூர்வாஸரே, நீர் தபஸ்ஸை அழித்து கொடுத்த சாபம் வீணாக போகவில்லை, நானும் என்னைச் சேர்ந்தவர்களும் ஸ்வதந்திராள், இந்த சாபத்தை வேண்டியபோது உபயோகப்படுத்திகொள்வோம். அடுத்த கிருஷ்ணவதாரத்தில் பாரத யுத்தத்தில் ஜயத்ரதவதத்திற்காக இந்த சக்கிரம் ஒளியற்று, நீருண்ட மேகம்போல் கருத்து, சூரியனை மறைக்கவேண்டிய காலத்தில் உம்முடைய சாபத்தை உபயோகித்துகொள்ள போகிறேன், ஓ தூர்வாஸரே! என் பக்தன் அம்பரீஷன் பாரணை செய்யாமல் உபவாசமிருக்கிறான், நீர் சீக்கிரம் அங்கே போமென்று அனுப்பினார்.

### 33. கந்தபத்தியம்.

ஊநி விநியா ஜௌநீ ந்ரு௱வ௱ -
ஜநா நாய௱நி வதிஜெகுமி தீநதெதாவநு|
விந௱ஷ௱ஜொ நவ௱௱வ௱ விஹ௱வஷ -
வநஜம்ப௱ஷ கொாஜி விநய௱௱தொவநு||

அனிவினியாமௌள நீந்த்ருடு ஜநநாதுனிவத்திகேகி தீநதோடன்
வினுதலோ கர்சுசுவிபுபத வனஜம்புலகோரி வினயமுதோடன்

இ-ள். பகவானுரைத்ததை கேட்டு தூர்வாஸர் வாடின முகத்தோடு அம்பரீஷனருகில்வந்து அவனடிபணிந்து, வணக்கத்துடன் இராஜனை துதிக்கிறார்.

## 34. பைரவி-ஆதி.

భూపాలక నిన్ను - పూజించి పొగడితి -
ప్రోవవే - కరుణామతి (భూ)

నాపాలికి నీవే - పాలకు నీవేడి -
తాపము సేవాడితి - కొనియాడితి (భూ)

నేరములను మది - నెంచుట గురుకాదు -
పొరపాటు నన్ను కోనక మన్నించి పోదు|
మ్యారతో నన్ను గావవే వారెన్న రెనరాదు -
దారిగతి మీదు వేరెను లేదు (భూ)

பூபாலக நின்னு பூஜிஞ்சிபொகடிதி ப்ரோவவே கருணமதி (பூ)

நாபாலிகிநீவே பாலகுநீவேடி தாபமுசேவாடிதி கொனியாடிதி (பூ)

நொமுலனுமதி நெஞ்சுட குருகாது
பொரசாமு நன்னு கொனக மன்னிஞ்சியோது
ம்யாரதோ நன்னு காசேவாருன்ன ரெனராது
தாரிசகிகமீது வேரெனுலேது (பூ)

(இ-ள்) அப்பா மஹாராஜனே, உம்மை பூஜைசெய்து துதிசெய்கிறேன், கருணையுடன் என்னை இரக்ஷிக்கவேணும், என்னை காப்பாற்ற உம்மைத்தவிர வேறொருவருமில்லை, நான் செய்த அபராதத்தை மனதில் வைக்கக்கூடாது, எனக்கு வேறு கதியில்லை வழியுமில்லை. என்னை காப்பாற்றவேணும், இந்த சக்கிராயுதம் என்னை பஸ்மம் செய்யாமலிருக்கும்படி செய்து இரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார், பிறகு என்ன நடந்ததென்றால்:—

## 35. ப்யாக்-பதம்-ரூபகம்.

సుదర్శన నమస్తుభ్యం సహస్రారాచ్యుతప్రియ|
సర్వాస్త్ర ఘాతిన్ విప్రాయ స్వస్తిభూయా ఇడస్పతే||

ஸுதர்சன நமஸ்துப்யம் ஸஹஸ்ராராச்யுதப்ரிய
ஸர்வாஸ்த்ர காதின்விப்ராய ஸ்வஸ்திபூயா இடஸ்பதே:

(இ-ள்) ஹே சுதர்சனமே! உமக்கு நமஸ்காரம்செய்கிறேன், ஆயிரம் அரமுள்ளவரே, அச்யுதனுக்கு நேசமானவரே, உலகத்திலு

ள்ள எந்த ஆயுதங்களையும் கொல்லும் சக்தியுள்ளவரே, மிக காந்தியுள்ளவரே, இந்த துர்வாஸர் என்னை வேண்டிகொள்ளுகிறார், அவருக்கு க்ஷேமமுண்டாகவேண்டும், உமது ஜ்வாலையை அடக்கிக்கொண்டு இருப்பிடம் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார், உடன் என்ன நடந்ததென்றால்:—

36 விருத்தம்.

இவ்வித மிறைவன்வேண்ட விந்திரா பதியின்வாழி
யெவ்விய வொளிகுறைந்து யேகவே யிருந்தவிடம்
பவ்விய குணம்நிறைந்த பூஸுரர் வரவழைத்து
ஹவ்விய சாலையில்வேந்தன் அறுசுவை யன்னமிட்டானே.

(37) ஸாகி - கமாஸ் - ஆதி.

𑌭𑍂𑌪𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑌿 𑌸𑍍𑌤𑌾𑌪𑌸𑌮𑍇𑌨𑌂
𑌸𑍋𑌪𑌚𑌾𑌰𑌂 𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾।
𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑌾𑌰𑌣𑌾𑌮𑌕𑌰𑍋𑌤𑍍
𑌪𑌦𑍍𑌮𑌾𑌪𑌤𑌿𑌂𑌹𑍃𑌦𑌿 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾॥

பூபசிகாமணி ஸ்தாபஸமேநம்
ஸோபசாரம் போஜயித்வா
ப்ரேஷயித்வாமுநிம் பாரணு மகரோத்
பத்மாபதிம் ஹிருதித்யாத்வா

(இ-ள்) இந்த அம்பரீஷன் துர்வாஸருக்கு உபசாரத்துடன் போஜனஞ் செய்துவைத்து அனுப்பிவிட்டு, லக்ஷ்மீபதியை தன் ஹிருதயத்தில் த்யானஞ்செய்துகொண்டே தான் பாரணைசெய்தார். இவ்விதம் பக்தி செய்துவந்த அம்பரீஷமஹாராஜன் கடைசியில் என்ன செய்தாரென்றால்,

(38) 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

𑌤𑌥𑌾𑌂𑌬𑌰𑍀𑌷𑌸𑍍𑌤 𑌨𑌯𑍇𑌷𑍁 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂
𑌸𑌮𑌾𑌨 𑌶𑍀𑌲𑍇𑌷𑍁 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯𑌧𑍀𑌰𑌃।
𑌵𑌨𑌂 𑌵𑌿𑌵𑍇𑌶𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇
𑌮𑌨𑍋𑌦𑌧𑌦𑍍𑌧𑍍𑌵𑌸𑍍𑌤 𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌃॥

அதாம்பரீஷஸ் தனயேஷு—ராஜ்யம்
ஸமானசீலேஷு—விஸ்ருஜ்யதீர:
வநம் விவேசாத்மனி வாஸுதேவே
மனோதேத்வஸ்த குணப்ரவாஹ:

(இ-ள்) முடிவில் அம்பரீஷன் தனக்கு ஸமானகுணமுள்ள புத்திராளிடம் தன் ராஜ்யத்தை ஒப்புவித்து, வனஞ்சென்று ஸத்வரஜோ தமோ குணங்களாலுண்டாகும் விகாரங்களை விட்டு, தன் மனதில் வாஸுதேவனை ஸாக்ஷாத்காரப்படுத்தி, அவரிடம் தன்மயமாக விளங்கினர்.

## 39. பலசுருதி, ஸ்லோகம்.

𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌮𑌂𑌬𑌰𑍀𑌷𑌸𑍍𑌯 𑌭𑍂𑌪𑌤𑍇𑌃।
𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍𑌨𑌨𑍁𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍 𑌭𑌕𑍍𑌤𑍋 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍॥

இத்யேதத் புண்யமாக்யானம் அம்பரீஷஸ்யபூபதே:
சங்கீர்த்தயன னுத்யாயன் பக்தோபாகவ தோபவேத்!

(இ-ள்) இந்த பரிசுத்தமான அம்பரீஷ சரித்திரத்தைக் கேழ்க்கிறவர்களும், சொல்லுகிறவர்களும், நினைக்கிறவர்களும் பகவத்பக்தராவார்கள், இஹபர சுகத்தைப் பெருவார்கள் என்று சுகாசாரியார் பரீக்ஷித்துராஜனுக்கு தெரிவித்தார்.

## உபஸம்ஹாரம்.

எக்காலத்திலும் அம்பரீஷன் அகண்ட ரஸாநுபவத்துடனிருந்ததால், பிரம்மசாபத்தை ஜயித்தார், ஆகையால் பிரதமபதத்தில் பிப பிப அகண்டரஸம் என்று போதித்தார்.

𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌾𑌨𑌨𑍍𑌤 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌨𑌾𑌮𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑌨𑌂 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦।
𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦॥ 𑌸𑍀𑌤𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌮𑌰𑌣𑌂 𑌜𑌯𑌜𑌯𑌰𑌾𑌮। 𑌨𑌮𑌃 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀
𑌪𑌤𑌯𑍇 𑌹𑌰𑌹𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌵। 𑌜𑌯𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌵𑌰𑌦 𑌹𑌰𑌿𑌵𑌿𑌟𑍍𑌠𑌲𑍇।
𑌕𑌾𑌯𑍇𑌨 𑌵𑌾𑌚𑌾.....𑌮𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿। 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌂 𑌕𑍇𑌶𑌵𑌂..........
𑌹𑌰𑍇𑌰𑌾𑌮 𑌹𑌰𑍇𑌰𑌾𑌮.....𑌮𑌂𑌗𑌳𑌂॥ 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌃॥

॥ 𑌅𑌂𑌬𑌰𑍀𑌷 𑌚𑌰𑌿𑌤𑍍𑌰 𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌂 ॥

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

184399

# ஹரிஹர கதா ரத்னாவளி.

(ஓர் ஹரிகதா காலட்சேபம் ஸீரீஸ்.)

இது முன்னோர்களால் பல கிரந்தங்களிலிருந்து தேடி எடுக்கப்பட்டு, இந்துஸ்தானி, மகாராஷ்டிரம் முதலிய பல பாஷைகளில் ஹரிகதா ரூபமாக செய்யப்பட்ட 300 ஹரிஹர கதைகள் அடங்கியது. இதை யாவரும் தாமே சுலபமாய் பிரசங்கிக்க உபயோகிக்கும்படி (1) கதாஸங்கிரக சுலோகங்கள் (2) தமிழில் கதைச்சுருக்கம் (3) நாமசித்தாந்த நிரூபணம் (4) சரித்திர நிரூபணம் இவைகளை அர்த்தத்துடன் தெளிவாக அச்சிடப்பட்டு மாதம் ஒரு ஹரிகதையுள்ள ஒரு ஸஞ்சிகை வெளிவரும். வருடச்சந்தா உள்நாட்டிற்கு தபால் சார்ஜு உள்பட (ரூபா) 5 0 0. வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளவும்.

---

## அச்சிட்டிருக்கும் புஸ்தகங்களின்

## விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராதா கல்யாணம் | 0 | 8 | 0 |
| 2. | கணேச ஜன்ம | 0 | 8 | 0 |
| 3. | கிருஷ்ண ஜன்ம | 0 | 8 | 0 |
| 4. | கிருஷ்ண பாலக்ரீடா | 0 | 8 | 0 |
| 5. | துருவ சரித்திரம் | 0 | 8 | 0 |
| 6. | வள்ளீ கல்யாணம் | 0 | 9 | 0 |
| 7. | வத்ஸலா கல்யாணம் | 0 | 10 | 0 |
| 8. | கருட கர்வஹரணம் | 0 | 8 | 0 |
| 9. | ருக்மாங்கத உபாக்யானம் | 0 | 8 | 0 |
| 10. | அம்பரீஷ உபாக்யானம | 0 | 8 | 0 |
| 11. | குசேல உபாக்யானம் (அச்சில்) | | | |
| 12. | கஜகௌரீவ்ருத சரித்திரம் (அச்சில்) | | | |

*சந்தாதாரரல்லாதார்க்கு ஷெ விலைக்குக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

ஹரிஹர கதா ரத்னாவளி ஆபீஸ்,

15-வெள்ளாழ தெரு, வேப்பேரி, மதராஸ்.